# அரசு ஊழியர்

அக்டோபர் 2019

மலர் : 40 இதழ் : 10

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


## பொருளாதாரமும் சிங்கிள் டீயும்!

பொருளாதார புள்ளி விவரங்களை
எடுத்து எடுத்து வீசறான்;
பங்கு மார்க்கட், சென்செக்ஸ்-னு
என்ன என்னமோ பேசறான்;
கரன்ஸிநோட்டுல காந்தி படத்தை
யோக்கியன் போல காட்டறான்;
கண்ணசந்தா கோட்சே குல்லா
நமக்கு நல்லா மாட்டறான்!

நிதியமைச்சர் சொல்லும் ஜோசியம்
என்னஇருந்தும் என்ன புண்ணியம்?
சிங்கிள் டீ-யுடன் மூணுவேளையும்
சிங்கியடிக்குது ராம ராஜ்ஜியம்!

- நவகவி

# நெல் விளைந்த நிலத்தில் சொல் விளைந்தது!

வரலாற்றுச் சிறப்பு மிக்க நமது சங்கத்தின் 13ஆம் மாநில மாநாடு தஞ்சைத் தரணியில் சிறப்பாக நடைபெற்று புதிய அத்தியாயம் படைத்திருக்கிறது. நிலைத்து நிற்கும் கொள்கைகளாலும், தனித்துவ லட்சியங்களாலும் நமது முன்னோடித் தோழர்கள் தங்கள் வாழ்நாளையெல்லாம் அர்ப்பணித்து உருவாக்கிய இந்த இயக்கம் இன்னும் புதிய பொலிவோடு அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காகவும், நலன்களுக்காகவும் போராட தஞ்சை பெரியகோவிலின் கோபுரத்தைப் போல கம்பீரத்துடன் உயர்ந்து நிற்கிறது. கருத்து மோதல்களாலும், உள்சங்க ஜனநாயகத்தாலும் இந்த இயக்கம் இன்னும் உறுதியாக கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்களுக்காக சமரசமில்லா போராட்டங்களை முன்னெடுத்து வரும் இயக்கத்தின் துடிப்புமிக்க நிர்வாகிகளாக ஏற்கெனவே இருந்தவர்களில் சிலரும் புதியதாக சிலரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் சங்க நிர்வாக கட்டமைப்பை செம்மைப்படுத்தவும் ஊழியர்களை வழிநடத்தவும் உரிய பொறுப்போடு கடமையாற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை. நெல் விளையும் பூமி சொல் விளையும் பூமியாக மாறி மூன்று நாட்களும் நல்லபல கருத்துக்களை விளைவித்து இந்த இயக்கத்தை மேலும் துடிப்பானதாக மாற்றியுள்ளது.

மாநாட்டு அரங்கின் முகப்பு முதல் மாநாட்டு மேடை வரை அலங்காரங்கள், பதாகைகள், கலை நிகழ்ச்சிகள் என திரும்பிய இடமெல்லாம் தோழர்களின் திறமைகள் திக்குமுக்காட வைத்தன. செவிக்கு உணவில்லாதபோது வயிற்றுக்கா? அல்லது வயிற்றுக்கு உணவில்லாதபோது செவிக்கா? என்று பட்டிமன்றம் நடத்தும் அளவுக்கு கருத்துக்கூடமும் உணவுக்கூடமும் தங்கள் பங்களிப்பை போட்டி போட்டு செய்தன என்றால் மிகையாகாது.

உணவுக்காக, சிற்றுண்டிக்காக, தேநீருக்காக, பல இனங்களுக்காக சில தனிப்பட்ட நபர்களும், சில மாவட்ட மையங்களும் உதவி செய்து நம்மை நெகிழ வைத்துவிட்டனர். தோழமை சங்கங்கள் நிதியளிப்பு செய்தும் தோழர்கள் பலபேரும் தனிப்பட்ட முறையில் தங்களால் இயன்ற பொருளுதவிகள் செய்தும் இந்த மாநாட்டை நாம் எதிர்பார்த்ததைவிட பிரம்மாண்டமாக்கி காட்டி

விட்டனர். மூன்றுநாள் மாநாடு மிகச்சிறப்பாக நடைபெற உழைத்த தஞ்சை மாவட்டத்தின் அனைத்து நிர்வாகிகளுக்கும், தோழமைச் சங்கத் தினருக்கும், அனைத்துத்துறை தோழர்களுக்கும் புரட்சிகர வாழ்த்துக்கள். மாநாடு சிறப்பாகவும் வடிவமைத்தபடியும் நடைபெற உதவிய அனைவருக்கும் நன்றிகள்.

நம்முடைய இயக்கத்தைப் பொறுத்தவரை பதவி என்பது பந்தாவோ, பகட்டோ, பவிசான அந்தஸ்தோ அல்ல என்பதை அனைத்து ஊழியர் களும் நன்றாக அறிவார்கள். பதவி என்பதை கூடுதல் பொறுப்பாகவே இந்த இயக்கத்தின் நிர்வாகிகள் அனைவரும் உணர்ந்துள்ளார்கள். புதிதாக பொறுப்பேற்றிருக்கும் நிர்வாகிகள் சொல்லிக் கொள்ள விழைவதும் இதைத்தான், நாங்கள் போர் முனையில் முன் நிற்கும் வீரர்கள் அவ்வளவுதான். எங்களைத் தலைவர்களே என்று அழைப்பதை விட முன்னின்று சேவை செய்யும் முதன்மைச் சேவகர்களே என்ற அழையுங்கள் போதும். இயக்கம் என்பது கூட்டுப் பொறுப்பு. கூட்டு கருத்துகளின் மூலம் முடிவுகள் இறுதிப் படுத்தப்பட்டே அதன்பேரில் போராட்டங்களும், இயக்க நடவடிக்கைகளும் நடந்து வருகின்றன. எனவே, அதன் பின்புலத்தில் கூட்டுத் தலைமை, கூட்டு செயல்பாடு, தனிநபர் பொறுப்பு என்கின்ற நடைமுறை கூற்றுகளின் அடிப்படையில் இனிமேலும் அது தொடர்ந்து நடைபெறும்.

எந்தப்போராட்டத்திலும் நாம் சமரசம் செய்து கொண்டு அடிபணிந்து போனது கிடையாது. நம்முடன் வந்தவர்களில் சிலரால் இந்த இயக்கத் திற்கு பின்னடைவு ஏற்பட்டிருக்கலாம். அந்த பின்னடைவு நிச்சயம் தோல்வி கிடையாது. அந்த காரணத்திற்காக நாம் நம் இயக்க நடவடிக்கையை நிறுத்தியது கிடையாது. போராட்டங்களில் சில நேரங்களில் தொய்வு ஏற்படுவதும் சுற்றுப்புற சூழலைப் பொறுத்து போராட்டத்தின் வீரியத்தை மட்டுப்படுத்துவதோ அல்லது தள்ளிப்போடு வதோ எல்லா இயக்கங்களிலும் நடக்கும் இயல் பான விஷயங்களே. போராட்டக்களத்தில் இது ஒருவகை போர்முறையே. அது பதுங்கிப் பாயும் வேங்கையின் போர்க்குணம் போன்றது. பதுங்கிப் பாயும் தந்திரங்களும், தள்ளிப்போடும் சாணக் கியத் தனங்களும் போர்முறையில் இன்றியமை யாதவையாகும். போராட்ட முறைகளிலும் அதுவே சாலச்சிறந்ததாக அமைந்து வந்துள்ளது.

அதிகார வர்க்கங்கள் சிலவும், அதற்குத் துணை போகும் சிலரும் இந்த இயக்கத்தை இருட்டடிப்பு செய்ய கடந்த சில மாதங்களாகச் செய்த சூழ்ச்சி களும், தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிகளால் சங்கத் தின் முகத்தை சிதைத்து சின்னாபின்னப்படுத்தி விடலாம் என்று எய்த அம்புகளும் கற்களும் தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற எஃகு மார்பின் மீது மோதி உடைந்து வீழ்ந்திருக்கின்றன. பெற்ற தாயையே திட்டித் தீர்த்த மகனைப்போல இந்த சங்கம் வார்த்தெடுத்த தோழமைகளில் சிலரே இந்த தாய் இயக்கத்தை முடக்கிவிட நீதிமன்றம் வரை சென்றிருப்பதையும் இந்ததாய்ச் சங்கம் புன்முறுவலோடு எதிர்கொண்டிருக்கிறது. பாசம் காட்டி வளர்த்தமகன் மோசம் போய்விட்டது மட்டு மல்லாமல், பெற்ற தாயையே வெட்டி வீழ்த்தாமல் விடமாட்டேன் என்று முரண்டு பிடிப்பதும், எட்டி உதைத்தாலும் வெட்டிப் புதைக்க நினைத்தாலும் நீ என் மகன் என்பதை அவனுக்கு நினைவுபடுத்து கின்ற தாயுள்ளம், அவனைக் கட்டியணைத்து சுற்றியிருக்கும் சூழ்ச்சிகளில் இருந்து காப்பாற்ற முயற்சிகள் மேற்கொள்வதைப்போல் இந்த சங்கம், சந்தர்ப்ப சூழ்நிலைகளால் திசைமாறிப் போனவர்களை அரவணைத்து அவர்களின் அனைத்து சந்தேகங்களையும் தீர்த்திருக்கிறது. அதனால் தான் அரசு ஊழியர் சங்க வரலாற்றில் எப்போதும் இல்லாத நிகழ்வாக எல்லா நிர்வாகப் பதவிகளுக்கும் வாக்களிப்பு மூலம் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். இந்த நிகழ்வு தனிப்பட்ட நபரின் தெரிவாக இல்லாமல் ஜன நாயக முறைகளின்படி இந்தச் சங்கம் செயல்பட்டு வருவதை மீண்டும் எல்லோருக்கும் நிரூபித்திருக் கிறது.

விவாதங்கள், விளக்கங்கள், கருத்து மோதல் கள், நிர்வாகிகள் தேர்வுகள் எல்லாம் முடிந்து இந்த சங்கத்தை வழிநடத்த நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். வென்றவர்கள் எல்லாம் வீராதிவீரர் களும் அல்லர், தோற்றவர்கள் எல்லாம் விரோதி களும் அல்லர். ஜனநாயக பூர்வமான ஒரு அமைப் பில் வெற்றிகளும் தோல்விகளும் சமமானவையே சகஜமானவையே. வென்றவர்களும் தோற்றவர் களும் அவற்றைப் பொருட்படுத்தாது இந்த இயக் கத்தின் முன்னேற்றத்திற்காக, கொண்ட லட்சியங் களுக்காக, போராடிப் பெற்ற உரிமைகளை விட்டு விடாமல் காப்பதற்காக, பெற வேண்டிய உரிமை களுக்காக அனைவரும் ஒன்றுகூடி நிற்க வேண் டிய அவசியமும் அவசரமும் உள்ளது. ஊழியர் களின் மனதை முழுமையாக வெல்ல வேண்டு மானால் பொறுப்பிலுள்ளவர்கள் அனைவரும் ஒருமித்த கருத்தோடும், கைகோர்த்த கரத்தோடும் கடமை யாற்ற வேண்டும். முன்னேற்றப்பாதையில் மனதை வைத்து, முழுமூச்சாய் அதற்காக தினம் உழைத்து... நமக்கான அனைத்து உரிமைகளை யும் வாதாடிப் பெறுவோம் அன்றின் போராடிப் பறிப்போம் தோழர்களே! ❖

# தளராத மன உறுதியுடனும், தவறாத கடமை உணர்வுடனும் போராடுவோம்!

> கடமையைத் தொடரும் உணர்வு நம் அனைவரிடமும் உள்ளது. உண்மையாக உழைப்பதுதான் நம் அனைவரின் கடமை. அந்தக்கடமை நம்மை அழைப்பதை இப்போது உணர்கிறேன்.
>
> -ஆப்ரஹாம் லிங்கன்

**வி**டாமுயற்சிக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு என்றால் அது ஆப்ரஹாம் லிங்கன்தான். ஒருபோதும் விட்டுக்கொடுக்காத நபரைப்பற்றி அறிய வேண்டுமென்றால் நாம் வேறெங்கும் தேடவேண்டாம் ஆபிரஹாம் லிங்கன் போதும். வறுமையில் பிறந்த லிங்கன் தன் வாழ்க்கை முழுவதும் தோல்விகளைச் சந்தித்தார். அவர் எட்டுத் தேர்தல்களில் தோற்றார். இருமுறை தொழிலில் திவாலானார். நரம்பு மண்டல பாதிப்புக்கு உள்ளானார்.



பலமுறை தோல்வியடைந்த அவர் வெறுத்து ஓடியிருக்கலாம். ஆனால் அவர் விலகவில்லை. தளராத உறுதியுடன் போராடினார். இலக்கை அடையும் உறுதியோடு கடமையைத் தொடரும் உணர்வு அவரிடம் இருந்தது. மேலும் உண்மையாக உழைப்பதுதான் தன்னுடைய கடமை என்று நம்பினார். அதனால்தான் விடாமுயற்சியுடன் போராடி சோதனைகளை எல்லாம் எதிர்கொண்டு அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியானார். அமெரிக்க வரலாற்றில் மகத்தான அதிபர்களுள் ஒருவராக இன்றும் அவர் போற்றப்படுவதற்குக் காரணம் அவருடைய தளராத மன உறுதியும் தவறாத கடமை உணர்வும்தான். நடந்து முடிந்த நம்முடைய 13ஆம் மாநில மாநாட்டில் நிலுவையில் உள்ள கோரிக்கைகள் குறித்து ஆழமாக விவாதிக்கப்பட்டன. ஒவ்வொரு கோரிக்கையும் ஆண்டுக்கணக்கில் கிடப்பில் கிடப்பதும், மாறி மாறி வரும் அரசுகள் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை கண்டுகொள்ளாமல் விடுப்பது வழக்கமாக இருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டன.

எனவே ஒட்டுமொத்த பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளின் ஒட்டுமொத்த முடிவாக இந்த மாநாட்டில் இரண்டு அறைகூவல் தீர்மானங்கள் பலத்த கரவோசைகளுடன் நிறைவேற்றப்பட்டன.

அடுத்த முறை ஆட்சிக்கு வருவோமா என்பதில் நம்பிக்கையற்றுப்போன ஒரு அரசாங்கம் அதிகார வர்க்கத்தின் வழிகாட்டுதல்களுக்கு ஆட்பட்டு மேற்கொண்ட ஜனநாயகத்திற்கு எதிரான நயவஞ்சக நடவடிக்கைகளில் முக்கியமானது நமது சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவரும், ஜாக்டோ-ஜியோவின் மாநில ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான தோழர் மு.சுப்பிரமணியன் அவர்கள் விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் துணை



வட்டார வளர்ச்சி அலுவலராக (தணிக்கை) பணிபுரிந்து, வயது முதிர்வின் காரணமாக கடந்த 31.05.2019 அன்று பிற்பகல் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற இருந்த நிலையில், காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டதன் அடிப்படையிலும் அன்னாரின் மீது தமிழ்நாடு குடிமை முறைப் பணி ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதி 17 (பி)-ன் கீழ் தொடரப்பட்ட குற்றச்சாட்டுக் குறிப்பாணைகள் நிலுவையில் உள்ளதைக் காரணம் காட்டியும், பணி ஓய்வு பெறும் நாளில் அதாவது 31.05.2019 அன்று தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதேபோன்று கரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தலைமை மருந்தாளுநராகப் பணிபுரிந்த நமது சங்கத்தின் முன்னாள் மாநில துணைத் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியன் மற்றும் 4 செவிலியர்கள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டதை ரத்து செய்திட வலியுறுத்தியும், தமிழ்நாடு மருத்துவத் துறை நிர்வாக அலுவலர் சங்கத்தின் மாநில துணைத் தலைவரும், கரூர் நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக கண்காணிப்பாளராக பணிபுரிந்த தோழர் சி.கண்ணன் அவர்களின் முறையற்ற பழிவாங்கும் பணி மாறுதலை ரத்து செய்திடவும், கோவை மாவட்ட அரசு ஊழியர் சங்க தலைவரும், ஊரக வளர்ச்சித் துறை வட்டார வளர்ச்சி அலுவலராகவும் பணிபுரிந்த தோழர் வே.செந்தில்குமார் உள்ளிட்ட நான்கு பேரை மாவட்டம் விட்டு மாவட்டம் பணி மாறுதல் செய்ததை ரத்து செய்திடவும், திருவாரூர் மாவட்டத் தலைவரும் திருவாரூர் மாவட்ட பொது சுகாதாரத் துறையில் மருந்தாளுநராக பணிபுரிந்த தோழர் பைரவநாதன் அவர்களின் பணி மாறுதல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்திடவும், உடன் நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தியும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அக்டோபர் 11 அன்று மாநிலம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் செய்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பெருந்திரள் முறையீடு செய்வது என்று அறைகூவல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் ஒருங்கிணந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தைக் கைவிடக்கோரியும், இளைஞர்களின் வேலைவாய்ப்பை பறிக்கும் அரசின் அரசாணை எண்.56ன் மூலம் அரசுத் துறையில் ஆட்குறைப்பு நடவடிக்கைகளைக் கைவிடக்கோரியும், சத்துணவு அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், MRB செவிலியர்கள் உள்ளிட்ட சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் மூன்றரை லட்சம் ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கிட வலியுறுத்தியும் தமிழக அரசுத்துறைகளில் காலியாக உள்ள நாலரை லட்சம் பணியிடங்களை உடனே நிரப்பிடக் கோரியும் நவம்பர் 11 முதல் 15வரை களியக்காவிளை, இராமேஸ்வரம், வேதாரண்யம் மற்றும் ஒசூர் ஆகிய நான்கு முனைகளிலிருந்தும் ஊழியர் மற்றும் பொதுமக்களை சந்திக்கும் பிரச்சார இயக்கம் நடத்தி நான்குமுனைகளிலிருந்தும் வரும் ஊழியர்கள் அனைவரும் நவம்பர் 18ம் தேதி ஒன்றுகூடி கோட்டை நோக்கி பேரணி நடத்துவதென இரண்டாவது அறைகூவல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**அரசாணை எண்.56ம் அதனால் ஏற்படப்போகும் விளைவுகளும்**

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் இன்றைய அரசாங்கங்கள் தங்கள் மக்களுக்கு செய்ய வேண்டிய சேவைகளை தனியார்வசத்திடம் ஒப்படைப்பதன் மூலம் தங்களுக்கான கடமைகளிலிருந்தும் ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களை தாயுள்ளத்தோடு தாங்கிப் பிடிக்கும் தர்மத்திலிருந்தும் விலகிக் கொள்ள நினைக்கின்றன. அரசாங்கம் என்ற

சேவைமையம் தனியார்மயம் என்ற லாபமயத்திடம் அடகுவைக்கப்பட்டு விட்டது. இதன் விளைவு இளைஞர்களின் எதிர்காலத்தை பாதிக்கும் என்பதை நன்கறிந்தும் தமிழக அரசாங்கம் தனியார் நிறுவனத்தைப்போல் அரசு நிர்வாகத்தை 'அமர்த்து - துரத்து' என்ற அடிப்படையில் நடத்த ஆரம்பித்துள்ளது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அரசாங்க வேலையில் சேர்பவர்களுக்கு இனிமேல் ஓய்வூதியம் என்பது அவர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியமாகத்தான் இருக்கும் என்பதிலிருந்து தொடங்கி இன்று அரசுத்துறைகளையே தனியார்வசம் ஒப்படைக்கும் நிலைமைக்கு அரசு நிர்வாகம் வந்திருக்கிறது. இதன்விளைவுகள் நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாத சமூகப் பிரச்னைகளை ஏற்படுத்தும் என்பதைப்பற்றி ஆட்சியாளர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. அரசு நிர்வாகத்தை ஏழை எளிய மக்களுக்குரிய பாதுகாப்புடன் மக்களின் அடிப்படைத் தேவைகள் பாதிக்காத வகையில் நிர்வகிக்க தனியார் மயங்களும், அவுட் சோர்சிங் முறைகளும், ஆட்குறைப்பு நடவடிக்கைகளும் ஒருபோதும் உதவாது என்று தெரிந்தும் அதைப்பற்றி கவலைப்படாமல் கண்மூடிக் கொண்டிருப்பது சமூக அக்கறையும், மக்களுக்கான அரசாங்கத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நடுநிலைவாதிகளையும் அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது.

அரசாங்க வேலைக்கு ஆள் எடுக்கத் தடை, காலிப்பணியிடங்களை நிரப்பாமல் அப்படியே விட்டுவிடுதல், புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாதது. தேவைப்படும் இடங்களில் தற்காலிகப் பணியாளர்களை நியமித்துக் கொள்ளுதல், வேலை முடிந்ததும் அவர்களை விரட்டிவிடுதல், ஒப்பந்த முறையில் பணியாளர்களை அமர்த்துதல், அவுட்சோர்சிங் முறையில் ஊழியர்களை நியமித்தல் போன்ற பலகட்ட வடிகட்டலுக்குப்பின்னர் தமிழக அரசு பெரும்பான்மையான துறைகளை தனியார்வசம் ஒப்படைக்கும் முடிவுக்கு வந்துள்ளதை 2017 அக்டோபர் மாதத்தில் தமிழக அரசு வெளியிட்ட அறிக்கை (செய்தி வெளியீடு எண்.678 நாள் 11.10.2017) சூசகமாக உணர்த்தியது.

> “அரசின் வருவாய் இனச் செலவினங்களைக் குறைத்திட பல்வேறு துறைகளில் உள்ள பணியாளர் நிலைகளை ஆய்வு செய்து அதில் தேவையற்ற பணியிடங்களை இனங்கண்டறியவும் இதரப் பணியிடங்களில் வெளிமுகமை மூலமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ முதல்கட்டமாக பணி நியமனங்களை மேற்கொள்ள தக்க பரிந்துரைகளை அளித்திட “பணியாளர் சீரமைப்புக் குழு'' (Staff Rationalization Committee) உருவாக்கப்படும்''

இந்த அறிவிப்பு அரசுப்பணிகளை முற்றிலுமாக ஒழித்துக்கட்ட சாணை தீட்டப்படும் கத்தி என்றும் இதனால் மக்கள் நலன் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்றும் அச்சம் தெரிவித்து, மக்கள் நலனில் அக்கறையுள்ள அரசு இந்த ஏற்பாட்டை தவிர்க்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசுக்கு வேண்டுகோள் வைத்தது. சமூக அக்கறை உள்ளவர்களும், மக்கள் நலத்திட்டங்களை மதிப்பவர்களும் இதுபோன்ற ஆட்குறைப்பு துறை ஒழிப்பு நடவடிக்கைகளால் ஏழை எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்றும் மக்கள் நலன் சார்ந்த துறைகளும் திட்டங்களும் அரசின்வசமே

இருக்க வேண்டும் என்றும் அரசு வேலை வாய்ப்புக்களை நம்பியிள்ள இளைஞர்களின் எதிர்காலம் இருளடைந்துவிடும் என்றும் அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டியும் அரசோ எதைப்பற்றியும் கவலைப்படாமல் அடுத்தடுத்த நகர்வுகளில் கவனம் காட்டி வருகிறது. அதன் எதிரொலிதான் இத்தனை பெரிய எதிர்ப்புகளுக்கும் இடையில் அரசாணை எண்.56 மூலமாக ஆதிஷேசய்யா கமிட்டியை தமிழக அரசு அமைத்திட்ட நிகழ்வு.

**கல்வி, வேலை வாய்ப்புகளில் தமிழக மாணவர்கள் இளைஞர்களுக்கு அநீதி**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குரூப்-4 தேர்வில் வெளி மாநிலத்தவர்களும் விண்ணப்பிக்கலாம் என அறிவிப்பு வெளியிட்டுள்ளது. தேர்வாணையத்தின் இந்த அறிவிப்பை பல தலைவர்களும் விமர்சித்துள்ள நிலையில் ஆளும் கட்சித் தரப்பில் இதனால் தமிழக இளைஞர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்றும், தமிழகத்தின் இடஒதுக்கீட்டுக்கு இது தடையாக இருக்காது என்றும் சப்பைகட்டு கட்டப்படுகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 309ன்படி, பொதுத் துறையில் நியமிக்கப்படும் பணியாளர்களின் நியமனம், பணி நிபந்தனைகள் மற்றும் பதவிகளுக்கான விதிகளை தமிழ்நாட்டுக்கான சட்டமாக இயற்றும் பொருட்டு, 2016ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) குறித்த சட்டமுன்வடிவு 2016ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டு உறுப்பினர்களின் ஒப்புதலுக்குப் பின்னர் 15.9.2016ம் தேதி அது “தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016’’ ஆக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த சட்ட முன்வடிவு சட்டமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலுக்காக கொடுக்கப்பட்டபோது, அதில் தமிழக இளைஞர்களின் நலன்களுக்கு எதிராக சேர்க்கப்பட்டுள்ள பிரிவு 20 “தகுதிகள்’’ தலைப்பில், உபபிரிவு 7-ஐ யாரும் எதிர்த்துரைக்காததால் அது சட்டமாக இயற்றப்பட்டுள்ளது. சட்டப்பிரிவு 20ன் உப பிரிவு (7) கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

“20(7) மாநிலத்தின் பதவி ஒன்றிற்கு பணியமர்த்தம் செய்யப்படுவதற்கான நபர் ஒருவர் -

(அ) இந்தியக் குடிமகன் ஒருவராக அல்லது

(ஆ) நேபாளத்தின் குடிமகன் ஒருவராக

(இ) பூடானின் குடிமகன் ஒருவராக

(ஈ) இந்தியாவில் நிரந்தரமாக குடியேற வேண்டும் என்கின்ற நோக்கத்துடன் பாகிஸ்தான், பர்மா, இலங்கை அல்லது கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளாகிய கென்யா, உகாண்டா, ஐக்கிய குடியரசாகிய தான்சானியா சாம்பியா, மாளவியா, ஸெய்ரா மற்றும் எத்தியோப்பியாவிலிருந்து இந்திய வம்சா வழியினராக இருத்தல் வேண்டும்.

வரம்புரையாக, ஆனால் மாநில (ஆ), (இ) மற்றும் (ஈ) இனங்களிலிருந்து வரும் நபர் ஒருவருக்கு அவர் சார்பாக மாநில அரசால் அளிக்கப்பட்டிருக்கிற தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கின்ற நபர் அவர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக, நபர் ஒருவர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அல்லது பிற நியமன அதிகார அமைப்பால் நடத்தப்படும் தேர்வு அல்லது நேர்காணலுக்கு அவருடைய தகுதிச் சான்றிதழ் தேவையானதாக இருக்கின்றது என்கின்ற நேர்வில் அனுமதிக்கப்படலாம் மற்றும் மாநில அரசில் வழங்கப்பட்டதாக உள்ள தேவையானதாக உள்ள சான்றிதழுக்கு உட்பட்டு அவர் தற்காலிகமாக பணியமர்த்தப்படலாம்.’’

## வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து பணி வேண்டி காத்திருப்போர் விவரம் - ஆகஸ்ட் 2019ஆம் மாத நிலவரம்

| விவரங்கள் | பதிவுதாரர்கள் | விவரங்கள் | பதிவுதாரர்கள் |
|---|---|---|---|
| 18 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவர்கள் | 1828210 | பட்டியலினத்தவர் | 1709102 |
| 18-23 வயதிற்குட்பட்ட உயர்கல்வியினர் | 1777763 | பட்டியலினம் (அருந்ததியர்) | 189429 |
| 24-35 வயதிற்குட்பட்ட வேலை நாடுநர்கள் | 2878184 | பழங்குடியினர் | 57163 |
| 35 - 58 வயதிற்குட்பட்ட அரசு பணி பெற விரும்பும் பதிவுதாரர்கள் | 1185730 | பிற்படுத்தப்பட்டோர் | 3066317 |
| | | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) | 304672 |
| 58 வயதினை கடந்தவர்கள் | 7020 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | 2147525 |
| 31.08.2019-ல் உயிர் பதிவேட்டின்படி மொத்த எண்ணிக்கை | 7676907 | இதர பிரிவினர் | 202699 |
| | | மொத்த எண்ணிக்கை | 7676907 |

ஏற்கனவே தமிழ்நாட்டில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி தவிக்கும் சூழ்நிலையில், தமிழகத்தின் அரசியல் ஸ்திரமற்ற தன்மை மற்றும் பிறசூழ்நிலைகள் காரணமாக பெரு நிறுவனங்கள் தொழில் தொடங்க முன்வராத நிலையில், தமிழக மாணவர்கள்/இளைஞர்கள் பத்தாம் வகுப்பு படித்திருந்தால் குரூப்-4 தேர்வெழுதி ஏதேனும் ஓர் அரசுத் துறையில் சேர்ந்துவிடலாம் என்று எண்ணியிருந்த எண்ணத்திலும் இப்போது மண் விழுந்திருக்கிறது.

### அரசுப் பணியிடங்களை, இளைஞர்களின் வேலைவாய்ப்பை சூறையாடும் பகடை ''ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித மேலாண்மைத் திட்டம்''

அரசாணை எண்.56ன் நீட்சியாக தமிழக அரசு 26.06.2018ஆம் தேதி "ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித மேலாண்மைத் திட்டம்" என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியிட்டது. இதன்படி தற்போது நடைமுறையில் உள்ள தன்னியக்க கருவூலப்பட்டியல் ஏற்பளிக்கும் முறை வலைதள சம்பளப் பட்டியல் மற்றும் மின்னணு வழி ஓய்வூதியம், நிதி மேலாண்மை மற்றும் மனிதவள மேலாண்மை ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதன்மூலம் கருவூலத்துறையை அரசுத்துறையிலிருந்து கழற்றிவிடும் ஏற்பாடு துவங்கி விட்டது உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

இந்த 'ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்திட்டம்' என்ற வாசகத்தின் அகராதி விளக்கம் என்பது இரு கூறுகளை கொண்டதாக உள்ளது. முதலில் இதில் கூறப்பட்டுள்ள மனித வள மேலாண்மைத் திட்டம் என்பதன் பொருள் அரசுப் பணியிடங்களை காலியாக்கி முற்றாக ஒழித்துக்கட்டி அதை தனியார்வசம் ஒப்படைத்து விடுவதாகும். மக்களுக்கு நல்லது செய்வதாக கூறிக்கொண்டு பல மக்கள்நலன் சார்ந்த திட்டங்களை நிறுத்தி விடுவது என்பது மக்களுக்கு எதிராக... மாணவர்களுக்கு எதிராக... இளைஞர்களுக்கு எதிராக... அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு எதிராக... அரசாங்கத்தின் நடவடிக்கைகள் உள்ளன என்பதை தோலுரித்துக்காட்டி வருகின்றன. சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் மக்கள் நலனை சூறையாடப் பார்க்கும் அதிகார வர்க்கத்தினருக்கும், அரசியல் வாதிகளுக்கும், ''மக்கள் நலன்'' என்ற வார்த்தையின் உள்ளார்ந்த அர்த்தம் புரியவில்லை என்பதைவிட புரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் நினைப்பதுதான் இதன் பொருள். இத்தகைய அரசாணைகளும் உத்தரவுகளும் ஜனநாயகம் என்ற நிரபராதியின் குரல்வளையை இறுக்கும் சர்வாதிகார கயிறுகளாகும்.

புதிய பொருளாதார திட்டம் எல்லா மக்களும் எல்லாமும் பெற வேண்டும் என்ற சமத்துவ சித்தாந்தத்தை சுக்குநூறாக்கி யார் எப்படி போனால் என்ன, மக்களின் சுமைகளையும் நலன்களையும் அரசு ஏற்கக்கூடாது என்கிற வேதாந்தத்தை விதைத்தது. அதுதான் கொஞ்ச கொஞ்சமாக செயல் வடிவம் பெற்று மக்கள் நலன் பொதுசேவை எல்லாவற்றையும் ஏப்பம் விட்டுவிடும் அரக்கனாக உருமாறியிருக்கிறது. ஒரு சில அமைப்புகள் மட்டும் இதை எதிர்த்து தொடர்ந்து போராடிக் கொண்டேயிருக்கின்றன. தொலைதூரப் பார்வையில் பார்க்கும்போது இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டேயிருந்தால், மக்கள் நலனும், உதவும் உள்ளமும், சேவை மனப்பான்மையும் முற்றிலுமாக ஒழிந்து, நாடு முழுவதும் காட்டு மிராண்டித்தனமே நிறைந்து நிற்கும்.

ஆதிசேஷய்யா கமிட்டி அமைக்கப்படுவதற்கு முன்பே ஆட்குறைப்பு நடவடிகக்கைளும், தனியார் வசம் துறைகளை ஒப்படைக்கும் ஏற்பாடுகளும் தொடங்கப்பட்டுவிட்டன. இந்த திட்டங்களை வேகப்படுத்தவே ஆதிசேஷய்யா என்ற டிரைவரை அரசாங்கம் நியமித்துள்ளதற்கான காரணமாகும். ஏற்கெனவே அரசுத்துறைகளில் காலிப்பணியிடங்கள் 30 முதல் 35 சதவீதத்திற்கும் மேல் உள்ள நிலையில் ஆதிசேஷய்யா தேவையற்ற பணியிடங்களை கண்டறிய நியமிக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டாலும் அவரின் நோக்கம் எந்தெந்தப்பணிகளை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனியார்வசம் ஒப்படைக்கலாம் என்பதை விட எந்தெந்தப் பணிகளை மட்டும் அரசின் வசம் விட்டுவைக்கலாம் என்பதாகும். அரசுப்பணிகளை சீரமைக்கும் முறையாக இது காட்சிப்படுத்தப்பட்டாலும் ஆதிசேஷய்யா குழுவின் நோக்கம் அரசுப்பணியிடங்களை குறைப் பதைத் தாண்டி, அவற்றை தனியார் மயமாக்குவதற்கான நடைமுறை ஏற்பாடே என்பதில் ஐயமில்லை.

ஏற்கெனவே ஆதார் விவகாரத்தில் தனிமனித உரிமைகளை பாதிக்கும் வகையில் உள்ளதாக உச்சநீதிமன்றமே சுட்டிக்காட்டியுள்ள நிலையில் கருவூல கணக்குத்துறையில் இப்போது கொண்டுவரக்கூடிய மாற்றம் என்பது அரசு இயந்திரத்தை தனியார் வசம் ஒப்படைக்கும் ஏற்பாட்டின் முக்கியத் நகர்த்தலாகும். ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டு ஊழியம் செய்வதானது, அரசாங்கமே கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் செயலாகும் என்று நாம் போராடி வரும் நிலையில் இதுபோன்ற செயல்கள் அரசாங்கத்தில் நிரந்தரப் பணியிடங்களையே இல்லாமல் செய்துவிடும் என்பது அரசு ஊழியர்களுக்கு அடிக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கை மணியாகும். தமிழக முதல்வர் இந்த விஷயத்தில் உடனடியாக தலையிட்டு தமிழக மாணவர்கள் இளைஞர்களின் நலன்களும் வேலைவாய்ப்பு வசதிகளும் பாதிக்காத வகையில் வேலைவாய்ப்பு பெறுவதை உறுதி செய்ய வேண்டும். அரசு நிறுவனங்களை தனியார்மயமாக்கும் போக்கின் மூலம் மக்கள் நலன் என்பது கேள்விக்குறியாகி விடும் என்பது மட்டுமல்ல இளைஞர்களின் எதிர்காலம் நாட்டின் வருங்காலம் போன்றவைகூட தீவிரவாதம், பயங்கரவாதம், ஆயுதவாதம் போன்ற சாத்தான்கள் கையில் சிக்கிவிடும் பேரபாயத்தை ஏற்படுத்திவிடும் என்பதை உணர வேண்டும். வேலைவாய்ப்பின்மை என்பது அந்தந்த தனிப்பட்ட இளைஞனின் பிரச்சனை அல்ல அது சமூகத்தின் பிரச்சனை என்பதை அரசாங்கம் உடனே கவனிக்கமால் விட்டுவிட்டால் அதற்கான விலையை இந்த சமுதாயம் அடுத்த சில ஆண்டுகளில் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

## தொகுப்பூதியம், மதிப்பூதியம் வரையறுக்கப்படாத ஊதிய விகிதங்கள் ஒழிக்கப்பட 30 ஆண்டு போராட்டம்

தமிழக அரசாங்கத்தில் பல்வேறு அரசுத்துறைகளில் தொகுப்பூதியம், மதிப்பூதியம், வரையறுக்கப்படாத ஊதிய விகிதம், தினக்கூலி ஆகியவற்றின் கீழ் லட்சக்கணக்கான ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துகொண்டு வேலைக்காக காத்துக்கிடக்கின்றனர். இந்த இளைஞர்களின் எதிர்காலத்தை வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் இருளடையச் செய்து வருகிறது. இந்தியாவில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துகொண்டு வேலைக்காக காத்திருப்போர் எண்ணிக்கை பத்துகோடியை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்றும், கிராமப்புறங்களில் வேலை கிடைக்காத நபர்களின் எண்ணிக்கை 20 கோடி பேர்களுக்கும் மேல் என்றும் பல்வேறு நிறுவனங்களின் ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த நிலைக்கு பரிகாரம் தேட வேண்டிய நிலையில் மத்திய மாநில அரசுகள் உள்ளன.

தமிழக அரசுத்துறைகளில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் விடப்பட்டுள்ள நிலை ஒரு புறமிருக்க, படித்துவிட்டு வேலை வழங்கப்படாமல் இருக்கும் இளைஞர்களும் பெண்களும் மறுபுறம். இவற்றுக்கிடையில் இளைஞர்களையும், பெண்களையும் மிகக்குறைந்த கூலிக்கு வேலைக்கு அமர்த்தி அவர்களின் உழைப்புச் சக்தியைச் சுரண்டும் நடவடிக்கை நடைபெற்று வருகிறது.

இத்தகைய கொத்தடிமை கூலிமுறையின் கீழ் சத்துணவு மைய அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், சமூகவனப் பாதுகாவலர்கள், MRB செவிலியர்கள் போன்ற பல்வேறு பணிகளை செய்யக்கூடிய ஊழியர்களின் உழைப்பு முறையான ஊதியமின்றி பல ஆண்டுகளாக சுரண்டப்பட்டு வருகிறது. இவர்கள் எவ்வித பதவி உயர்வும், பணி நன்மைகளும் இல்லாமல் உழன்று வருகின்றனர்.

இதேபோல் மத்திய அரசின் திட்டங்களின் கீழ் மாநிலங்களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் நிறுவனங்களிலும் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் நிறுவனங்களிலும் முற்றிலும் ஒப்பந்த முறையில் ஊழியர்கள் நியமிக்கப்பட்டு குறைவான ஊதியத்தில் பணியில் அமர்த்தப்படுகின்ற போக்குகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், தேசிய பார்வைகுறைபாடு கட்டுப்பாட்டு கழகம், மாநில தொழுநோயாளிகள் கழகம், தேசிய ஊரக சுகாதாரப் பணி, தேசிய நகர்ப்புற சுகாதாரப்பணி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டம், தமிழ்நாடு மூலிகைப் பண்ணை மற்றும் மூலிகை மருந்து கழகம், நோயாளிகள் நல கழகம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் போன்ற நிறுவனங்களின் சேவைகள் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டு நிறுத்தப்பட்டு விடக் கூடியவை அல்ல. காலவேக மாற்றத்தில் இத்தகைய நிறுவனங்கள்/ கழகங்கள்/வாரியங்கள் தொடர்ந்து இயங்க வேண்டிய அவசியம் உள்ள நிலையில் அங்கு பணிபுரியும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டு ஊழியம் செய்வதானது, அரசாங்கமே கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் செயலாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட அரசு சார்புடைய நிறுவனங்கள் போல் புதிதாக துவக்கப்படும் அலுவலகங்களில் அமர்த்தப்படும் பணியாளர்கள், ஒப்பந்த முறையிலான அடிமாட்டு

கூலிமுறையில் அமர்த்தப்படும் போக்கானது உடனடியாக கைவிடப்பட்டு ஏற்கெனவே மேற்கண்ட மத்திய / மாநில அரசு சார்புடைய நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் அரசு, முறையான ஊதியத்தை நிர்ணயம் செய்து வழங்கவும், தமிழக அரசின் பல்வேறு துறைகளில் தற்காலிகமாக பணியாற்றும் ஊழியர்களை பணி நிரந்தரமாக்க வேண்டும்.

**சமூக அநீதிகள்!**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வராக இருந்தவர்கள் எவரும், இந்த மாநிலத்திற்கென பிரத்தியேகமாக இருந்த பல விஷயங்களை விட்டுக்கொடுக்காமல் காத்து வந்தார்கள். சில விஷயங்களை காக்க முடியாவிட்டாலும் தங்களின் எதிர்ப்புகளை பதிவு செய்தார்கள். சமூக நீதியைக் காக்க கொண்டு வரப்பட்ட திட்டங்கள் இன்று காணாமல் போகின்ற நிலையில் இருக்கின்றன. நீட் தேர்விலிருந்து தமிழக மாணவர்களுக்கு விலக்கு என்பது கையிலிருந்து நழுவிய கண்ணாடிக் குவளையாகிப் போனது. மருத்துவ மேற்படிப்பு மாணவர்கள் கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு பணி செய்தால் அவர்களுக்கு மேற்படிப்பில் கொடுக்கப்பட்டு வந்த 50 சதவீத இட ஒதுக்கீட்டிற்கான கதவுகளும் இழுத்து மூடப்பட்டுள்ளன. தமிழக அரசு அலுவலகங்களில், பாலிடெக்னிக் கல்லூரிகளில் தமிழக மாணவர்களுக்கென இருந்த இடஒதுக்கீடு இப்போது எல்லோருக்குமானதாக மாற்றப்பட்டிருக்கிறது. அரசுத்துறைகளில் காலியாக விடப்பட்ட பணியிடங்கள் பல வருடங்களாகியும் நிரப்பப்படவில்லை. அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான மத்திய அரசின் ஏழாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகள் பல அளப்பரிய போராட்டங்களுக்குப் பின்னர் நீதிமன்ற தலையீடு காரணமாக 21 மாத நிலுவை பிடித்துக்கொண்டு வழங்கப்பட்டுள்ளது. அதனை வழங்கக் கேட்டு பல கோரிக்கைகள் போராட்டங்கள் என நடத்தியும் இதுநாள்வரை அரசு அதை கண்டுகொள்ளாமல் இருக்கிறது. அரசு வேலைகளில் தமிழக இளைஞர்களுக்கு முன்னுரிமை தரப்படுவது மறுக்கப்பட்டு பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் வேலையில் சேர வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் தமிழகத்தில் தழைத்தோங்கிய சமூகநீதி புதைக்கப்படக்கூடிய வேலைகள் தொடங்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. இவற்றை தமிழக மக்களும் அரசு ஊழியர்களும் ஒன்றுசேர்ந்து எதிர்ப்பதன் மூலம் மட்டுமே நாட்டு மக்களுக்கான நியாயங்கள் காக்கப்படும்.

## 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை அரசு ஊழியர்கள் ஆசிரியர் களுக்கு மட்டும் மறுக்கப்பட்டுள்ளதில் நீதியும் இல்லை நியாயமும் இல்லை

சட்டங்களாலும் நிர்வாக விதிமுறைகளாலும் உறுதிபடுத்தப்பட்டுள்ள அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை தருவதற்கு அரசாங்கம் மறுப்பதும், குறைப்பதும், நிலுவைகளை தரமுடியாது எனக் கூறுவதும், ஊழியர்களுக்கான உத்தரவாதப்படுத்தப்பட்ட உரிமைகள் மறுக்கப்படும்போது நீதிமன்றம் அரசை அதைக் கொடுக்கச்சொல்லி வலியுறுத்தாமல் இருப்பதும், தங்களது மறுக்கப்பட்ட உரிமைகளைக் கேட்டு ஊழியர்கள் போராட்டம் நடத்தினால் அதற்கு தடைவிதிப்பதும் மக்களாட்சித் தத்துவத்தை கேலிக்கூத்தாக்கும் நிகழ்வுகள்.

2014ம் ஆண்டில் நிதியமைச்சராக இருந்த இப்போதைய துணை முதல்வர் பன்னீர்செல்வம் சட்டமன்றத்தில், 2014-15ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் வரவு செலவு திட்ட உரையில் “2016-17ஆம் ஆண்டு முதல் ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என கருதப்பட்டுள்ளது. முந்தைய ஊதியக்குழுக்கள் போலன்றி, இக்குழுவின் பரிந்துரைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் பிந்தைய ஆண்டுகளில் தவணைகளில் நிலுவைத்தொகை வழங்க வேண்டிய சூழ்நிலை எழாது எனவும் கருதப்பட்டுள்ளது’’ என தெரிவித்ததும், அரசு படி ஊதியமாற்றம் மேற்கொள்ளாததுடன் 21 மாத காலதாமதத்துடன்

அதுவும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் வெகுண்டெழுந்து போராட்டம் நடத்திய பின்னர் நீதிமன்றத்தின் அறிவுரையால் ஊதிய மாற்றமும் ஏற்பட்டதும் அந்த ஊதிய மாற்றம்கூட ஊழியர்களுக்கு நியாயமாக கண்டிப்பாக கிடைக்க வேண்டிய 21 மாத நிலுவைத் தொகையை பறித்துக்கொண்டு வழங்கப்பட்டுள்ளதையும் மத்திய அரசு ஊழியர்கள் தங்களுக்கான ஊதிய மாற்றத் தொகையை ஜனவரி 2016 முதல் பெற்றுள்ள நிலையில் தற்போது நீதிபதிகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சம்பள உயர்வில் கூட ஊதிய உயர்வு நிலுவைத் தொகை ஜனவரி 2016 முதல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை ஜனவரி 2016 முதல் கொடுக்க வேண்டியதுதான் நியாமானதும் தர்மமானதும் ஆகும்.

ஆனால் ஆளும் அரசோ அரசு ஊழியர்களின் ஊதியத்தை மட்டும் தர மறுப்பது அரசு ஊழியர்களின் தார்மீக உரிமையை தட்டிப்பறிக்கும் செயலாகும். அரசின் கஜானாக்களை சுரண்டி சுரண்டி ஓட்டையாக்கிவிட்ட அரசியல்வாதிகள் இப்போது அரசு ஊழியர்களின் பாக்கெட்டை சுரண்டி சுகம்காண முனைந்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களும் அசிரியர்களும் அரசியல்வாதிகளின் ஊழல்களுக்கும் சுரண்டல்களுக்கும் எதிராக ரௌத்திரம் பழக வேண்டிய அவசியம் இப்போது எழுந்துள்ளது. எனவே அரசு ஊழியர்கள் மீதும் நிர்வாகிகள் மீதும் ஏவப்படும் பழிவாங்கும் நடவடிக்கைகளை அரசு திரும்பப்பெற வற்புறுத்தி நடத்தப்படும் பெருந்திரள் முறையீட்டிலும் (அக்டோபர் 11) மற்றும் மக்களுக்காகவும் நமக்காகவும் சமூக நலனுக்காகவும் முன்னெடுக்கப்பட்டுள்ள நான்குமுனை ஜீப் ஜாதா மக்கள் பிரச்சார இயக்கத்திலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் கோட்டை நோக்கிய பேரணிக்கும். நாம் அனைவரும் ஒட்டுமொத்தமாக கலந்து கொண்டு கோரிக்கைகளை வென்றெடுக்க களம் காணத் தயாராவோம்.

**விழைந்த பொருள்**
**விளைத்தல் வரை இனி**
**ஓய்தலில்லை சாதலில்லை!**

**சபதம் ஓங்க அகிலம் நடுங்க**
**புஜங்கள் புடைக்க எழும்**
**அரசூழியர் படையாவோம் நாம்!**

**நான்கு முனைகளில் இருந்தும்**
**தீ பரவ தெரியட்டும் வெப்பம்**
**உணரட்டும் அரசு தோழமையின் நுட்பம்!**

**இனியொரு விதி செய்ய**
**எதிர்வரும் வினை கொய்ய**
**அடங்காப் பசியுடன் எழுவோம்!**

**விழைந்த பொருள் விளைத்தல் வரை**
**விழித்திருப்போம் பசித்திருப்போம்**
**இணைந்திருப்போம்!**

❖

# சிக்னலில் கிடைத்த ஞானம்

இந்த பரபரப்பான, எந்திரத் தனமான வாழ்க்கைச் சூழலில் அதுவும் அரசாங்க வேலைகளில் பக்கத்து இருக்கையில் என்ன நடக்கிறது என்றுகூட பார்ப்பதற்கு அரசு ஊழியம் செய்பவர்கள் நேரமில்லாமல் சுருக்கப்பட்டிருக்கிறார்கள். அரசாங்க வேலை செய்பவர்கள் எல்லோரும் கிட்டதட்ட புரோகிராம் செய்யப்பட்ட ரோபோக்களாக ஆக்கப்பட்டு விட்டனரோ என்ற ஐயம்கூட எழுகிறது. குழந்தைகளிடம் பாசம், குடும்பத்தாருடன் நேசம் என்பதெல்லாம் மோசம் போய்விட்டது.

இந்த நிலைக்கு தள்ளப்பட்ட பின்னர் காவிரி, ஹைட்ரோகார்பன், மீத்தேன், புதிய கல்விக்கொள்கை, நீட், புதிய ஓய்வூதியத் திட்டம், தனியார்மயமாக்கல், ஆட்குறைப்பு, அவுட்சோர்சிங் போன்றவற்றை எதிர்த்து போராட வேண்டியதெல்லாம் யாரோ செய்ய வேண்டிய கடமையாகிவிட்டது. சுருக்கமாகச் சொல்லப்போனால் நம்மைச்சுற்றி மனிதர்கள் இருக்கிறார்கள் என்ற உணர்வுகூட வற்றிப்போய்விட்டதோ என்ற எண்ணம்தான் எனக்கிருந்தது அந்த நிகழ்வு நடக்கும் வரை.

வழக்கம்போல் ஒரு பரபரப்பான சூழலில் ஒருநாள் காலை 10.10க்குள் அலுவலக வருகைப்பதிவேட்டில் என் வருகையை பதிவு செய்துவிடவேண்டும் என்ற நோக்கில் அண்ணாசாலையில் காட்டுத்தனமாக என்னுடைய இரண்டு சக்கர வாகனத்தை விரட்டிக் கொண்டிருந்தேன். ஸ்பென்சர் சிக்னலில் மஞ்சள் விளக்கு எரிய ஆரம்பிக்க அது சிவப்பாக மாறுவதற்குள் சிக்னலை கடந்துவிட வேண்டும் என்று வண்டியின் வேகத்தைக் கூட்டினேன். எனக்கு முன்னால் ஆறேழு இரண்டு சக்கர ஓட்டிகளும் சிவப்பு சிக்னல் விழுவதற்குள் சாலையைக் கடந்துவிடும் நோக்கில் சீறிக் கொண்டிருந்தவர்கள் சடன் பிரேக் போட்டு வண்டியை நிறுத்தினார்கள்.

டிராபிக் போலீஸ், ஆம்புலன்ஸ் வண்டி போன்றவைபற்றி எதுவும் கவலைப்பட முடியாத அந்த காலை நேரத்தில் எல்லோரும் சிக்னலில் ஒருசேர பிரேக்போட்டு சிக்னல் விழுவதற்கு முன்பே வண்டிகளை நிறுத்திவிட்டது எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. சிக்னலை எட்டிப் பார்த்தேன் அங்கு நான் பார்த்தகாட்சி மெய்சிலிர்க்க வைத்துவிட்டது. கண்பார்வைற்ற ஒரு இளம் தம்பதி கரம் கோர்த்து சிக்னலின் குறுக்கே நடந்து கொண்டிருந்தார்கள். அந்த மனிதரின் இன்னொரு கையில் கொம்பு இருந்து. அதன் முன்பக்கத்தை பிடித்துக்கொண்டு ஒரு சிறுவன் நடந்து கொண்டிருந்தான் காதுகளை கொண்டு அவன் சுற்றுப்புறத்தை கவனித்ததை பார்த்தபோது அவனுக்கும் பார்வையில்லை என்பது உறுதியாகத் தெரிந்தது. அவனது கையில் ஒரு கயிறு... கயிற்றின் மறுமுனை ஒரு நாயின் கழுத்தில் கட்டப்பட்டிருந்தது. அந்த நாய் அவர்களுக்கு வழிகாட்டுவது போல சிக்னலைக் கடந்து கொண்டிருந்தது. பையன், நாய் வேகமாகப் போவதை இழுத்துப் பிடித்து மெதுவாக நடந்தான். அதற்குக் காரணம், பின்னால் நடந்துவந்த அவனது அம்மாவின் கையில் தங்கையும் வயிற்றில் சிசுவும் இருந்ததால் அவளால் வேகமாக நடக்கமுடியாது என்பதை அவன் உணர்ந்திருந்தது போல் அவன் நடை தெரிந்தது.

சிக்னல் மாறுவதற்கு முன் சீறுவதற்கு தயாராக நின்றிருந்த எனக்கு அப்போது தோன்றியது ''பார்வையற்று இருப்பது

எவ்வளவு பயங்கரமானது'' என்று. அவர்கள் பாதி துாரத்தை கடப்பதற்குள் பச்சைவிளக்கு எரிய ஆரம்பித்துவிட்டது. ஆனால் பாருங்கள் யாரும் வண்டிகளை ஓட்ட எத்தனிக்க வில்லை. எல்லோருக்கும் ஒரே நேரத்தில் ஞானம் வந்துவிட்டது போல அனைவரும் அந்தக் காட்சியை கண்டு அவர்கள் சாலையை கடந்து முடிக்கும் வரை அமைதியாக இருந்தனர். பக்கத்தில் நின்றவர் சொன்னார், ''சார் என்னால நம்பவே முடியல. இந்த பரபரப்பான காலை வேளையில பச்சை சிக்னல் விழுந்தும் எந்த வண்டிக்காரரும் முந்திச்செல்லாமல் அவர்கள் கடக்கும் வரை நிற்பது அதிசயம்தான்.'' என்றார். அவருக்கு அடுத்தாற் போல இருந்தவர், ''அதுக்கு காரணம் இருக்கு சார். பார்வை யில்லாமல் உங்கள் வாழ்க்கை எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். பரபரப்பான இந்த சிக்னலில் நம்மால் பார்வையில்லாமல் நடந்து போவதை ஒவ்வொருவரும் கற்பனை செய்து பார்த்து நின்றுவிட் டார்கள்.''

அவர் சொன்னது சரிதான் நானும் அதைத்தான் செய்து கொண்டிருந்தேன். எனக்கென்ன தோன்றியது என்றால் அவர்கள் ஆறு பேரும் (நாயும் கருவும் உட்பட) உயிர்மீது அக்கறையில்லாமல் 'போனால் போகட்டும் போடா' என்று அவர்கள் சிக்னலை கடந்த மாதிரி தோன்றவில்லை. தமது லட்சியங்கள் மீது எண்ணற்ற தடைகள் இருந்தாலும் தம் மீது கொண்ட உறுதி யாலும் வாகன ஓட்டிகள் மீது கொண்ட நம்பிக்கையா லும் அவர்கள் தங்கள் இலக்கை அடைந்த தாகவே தோன்றியது.


அந்த சிக்னலிலிருந்து கடந்தபோது எனக்கு இரண்டு விஷயங்கள் தெளிவாயின. பரபரப்பான வாழ்க்கையின் வழியே கடந்து செல்லும் ஒவ்வொருவரும் உண்மையாகவே சமூகத்தை கவனிப்பதற்கு கொஞ்சம் நேரம் ஒதுக்க வேண்டும். நம்மைச்சுற்றி என்ன நடக்கிறது என்று கவனிக்க வேண்டும் என்பது. இன்னொன்று நாம் நம்முடைய லட்சியங்களை அடைய நமது முன்னால் இருக்கும் தடைகளைப் பார்த்து கவலைப் படக்கூடாது. நமது உள்ளுணர்வையும், ஆழ்ந்த அறிவு கொண்ட முன்னோடிகளின் வழிகாட்டலையும் நம்பினால் போதும் என்பது.

- ஜிஜி

## வாழ்த்துக்கள்

*தமிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறை ஊழியர் சங்கத்தின் 14-வது மாநில பிரதிநித்துவப் பேரவை ஆகஸ்ட் 10, 11 ஆகிய தேதிகளில் தருமபுரியில் நடைபெற்றது. மாநில தலைவராக மு.சௌந்தரராஜன், மாநில பொதுச் செயலாளராக வெ.செல்லையா, மாநில பொருளாளராக ஆர்.பட்டாபிராமன், மாநில துணைத் தலைவர்களாக சு.பத்மா, கே.எஸ்.மாரியப்பன், பா.சிவக்குமார், தி.க.ராமசாமி, க.பிச்சைவேலு, என்.வேலாயுதம், மாநில செயலாளர்களாக சேவியர் எக்ஸ்பெடிட்செபஸ்டின், கோ.பழனியம்மாள், த.இராமகிருஷ்ணன், ச.பாலகிருஷ்ணன், நவநீதகிருஷ்ணன், வினோத்ராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட அனைவருக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.*

**தலைக்கவசம் அணிவோம்! உயிரை பாதுகாப்போம்!**




மகாத்மா காந்தி இம்மண்ணில் தோன்றி 150 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் எவ்வளவு ஆண்டுகள் ஆனாலும் அவர் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டுதா னிருப்பார். தமது வாழ்நாள் முழுவதும் இந்திய மக்களின் ஒற்றுமைக்காகவும் மத நல்லிணக்கம் காக்கவும் ஓயாமல் உழைத் துக் கொண்டிருந்தார். அவரது 150ஆவது பிறந்தநாளில் இந்திய வரலாற்றைத் திரும்பிப் பார்க்க வேண்டியுள்ளது.

வரலாறு வரலாறாகவே சொல்லப்படுவது முக்கியமானது. இந்திய வரலாற்றின் முக்கியப் பகுதியான சுதந்திரப் போரைப் பல வரலாற்றறிஞர்கள் எழுதியுள்ளனர்.

நடந்ததை நடந்தவாறும் பங்களிப்புச் செய்தோரை சரியாகவே அடையாளம் காட்ட வேண்டியதும் அவசியம்.

இந்தியச் சுதந்திரப் போரில் ஈடுபட்டோர் சாதி, மதம், இனம், பால், வயது, கல்வி என எதையும் பார்க்கவில்லை. மகாத்மா காந்தியின் தலைமையில் அகிம்சை முறையில் சத்தியாகிரகப் போராட்டம் நடைபெற்றாலும் செங்குருதி சிந்தியும், இன்னுயிர் நீத்தும், இளமையை இழந்தும், வேலையை இழந்தும், செல்வத்தை இழந்தும் சுதந்திரப் போரில் விவசாயிகளும் தொழிலாளர்களும் மாணவர்களும், பெண்களும் என ஆர்ப்பரித்து ஈடுபட்டுக் கிடைத்ததே இந்தியச் சுதந்திரம்.

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக 1929ல் நாடு முழுவதிலும் 32 கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டு 'பிரிட்டிஷ் இந்தியாவின் அரசரின் அதிகாரத்தை அகற்றும்' சதியைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு பெரிய அளவிலான தண்டனைகள் விதிக்கப்பட்டன. முசாபர் அகமது வாழ்க்கை முழுமையாக நாடு கடத்தப்பட்டார். பிறகு 1930 ஜனவரி 26 அன்று கோடிக்கணக்கான இந்தியர்கள் சுதந்திர தின உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

அவர்களில் 90,000 பேர் மகாத்மா காந்தியுடன் சேர்ந்து வந்தே மாதரத்தையும் மற்ற தேசபக்த முழக்கங்களையும் முழங்கிக் கொண்டு சிறைக்குச் சென்றனர். ஆயிரக் கணக்கானோரின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இவையனைத்தையும் ஆர்.எஸ்.எஸ். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. 1930ல் ஹெட்கேவாருடன் சேர்ந்து ஆர்.எஸ்.எஸ்.ஐ உருவாக்கிய மூஞ்சே இலண்டனில் நடந்த முதல் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டார். முழு இந்தியாவும் சட்டமறுப்பு இயக்கப் போரில் கொந்தளித்துக் கொண்

பெரணமல்லூர் சேகரன்

டிருந்த நேரமது. 1930-ஜனவரி 26 அன்று சுதந்திர தினம் அனுசரிக்குமாறு காங்கிரஸ் விடுத்த சுற்றறிக்கையைப் பெயரளவுக்கு அமுல்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டபோது கூட ஆர்.எஸ்.எஸ். அதன் ஊழியர்களுக்கு தேசிய மூவண்ணக் கொடிக்கு வணக்கம் செலுத்தாது, பக்வா ஜண்டாவுக்கே (காவிக் கொடிக்கே) வணக்கம் செலுத்த வேண்டுமென்றும், அதன் தனிக் கூட்டங்களில் அதற்கு மரியாதை செலுத்த வேண்டும் என்றும் அவர்களை நிர்ப்பந்தித்தது.

1940ல் தனது மரணத்துக்கு முன் ஹெட்கேவார் 1931ல் ஆர்.எஸ்.எஸ்.ல் இணைந்து பொதுச் செயலாளரக இருந்த கோல்வால் கரைத் தனது வாரிசாகத் தேர்ந்தெடுத்தார். கோல்வல்கர் ஒருபோதும் எந்தத் தேசிய இயக்கத்திலும் பங்கேற்றதில்லை என்பதுடன் பிரிட்டிஷை எதிர்த்த போரில் சிறையின் உட்புறத்தைக்கூட பார்த்தில்லை.

காந்திஜி மற்றும் தேசியத் தலைவர்களின் இந்து- முஸ்லீம் ஒற்றுமை பற்றிய முழக் கங்களுக்கு இடமில்லை என கோல்வால்கர் பிரகடனம் செய்தார்.

1936ல் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையின் கீழ் முன்வைக்கப்பட்ட மதச்சார்பற்ற ஜனநாயக நகலுக்கு முரணாக கோல்வால்கர் 'இருதேச' சித்திரத்தை முன்வைத்தர். "இந்துக்கள் ஆதிக்கமிக்க பகுதியிலும் முஸ்லீம்கள் கீழ்மட்டத்திலும் இருப்பர். முஸ்லீம்கள் நாட்டில் வசிக்கலாம், ஆனால் முழுமையான இந்து தேசத்துக்குக் கீழ்ப் படிந்து எதையும் கேட்காமல் எந்த உரிமையும் இல்லாமல், எந்த முன்னுரிமை பெற்ற நடைமுறையுமின்றி குடியுரிமைகூட இன்றி இருக்க வேண்டும்".

முஸ்லீம் லீக் பாகிஸ்தான் முழக்கத்தை ஏற்ப தற்கு முன்பேயே ஆர்.எஸ்.எஸ். முழக்கமான 'இந்து-இந்தி-இந்துஸ்தான் மற்றும் இந்துராஜ் அமர் ரஹே' ஆகியவை தெருக்களில் உரத்து ஒலித்தன. முஸ்லீம் லீகைப் போலவே ஆர்.எஸ்.எஸ்.சும் அதன் அரசியல் குரு இந்து மகாசபாவும் இந்தியப் பிரிவினைக்கான பாதையை உருவாக்கிய சமமான குற்றவாளிகள். 'உண்மையான மதச்சார்பின்மை' போன்ற எந்தத் தேன் தடவிய வார்த்தைகளும் தேசிய இயக்கத்துக் கெதிரான ஆர்.எஸ்.எஸ்.சின் குற்றம், வஞ்சனை ஆகிய உண்மைகளை மறைக்க முடியாது.

கோல்வால்கர் அவரது "நாமும் நமது தேசியவாதத்தின் விளக்கமும்" என்ற நூலில்... "இந்துக்களுக்குள் பிராமணன் தலையாகவும், அரசன் கைகளாகவும், வைசியர் தொடையாகவும், சூத்திரர் கால்களாகவும் இருந்து கடவுளே தம்மை வெளிப்படுத்திக் கொள்வதாகும்." அவர் மேலும் அழுத்தமாக கூறுகிறார், "இதன் அர்த்தம், இந்த நால்வகை ஏற்பாடுதான், அதாவது இந்து மக்கள்தான், நமது கடவுள்"...

இவ்வாறாக இந்து தேசத்தின் கடவுட் தன்மை தனது நால்வருண சாதிய அமைப்பை சூத்திரர்களைப் பாதத்தின் அளவில் வைத்து நிற்கிறது. ஆர்.எஸ்.எஸ். சின் உறுப்பினர் தகுதி இந்து ஆண்களுக்கு மட்டுமே உண்டு. இவ்வாறாக இரு தேசக் கோட்பாட்டை முன்வைப்பதிலும், நிலப் பிரபுத்துவப் பாரம்பரிய மற்றும் ஆணாதிக் கத்தை வலியுறுத்துவதிலும் ஆர்.எஸ்.எஸ். முஸ்லிம் லீகை மிகவும் பின்தங்க வைத்து விட்டது. குறைந்தபட்சம் முஸ்லீம் லீக் பெயரளவுக்காவது சமத்துவம் பற்றிப் பேசியது, அதற்கு உறுப்பினர்களாகப் பெண்களுக்கு அனுமதியும் இருந்தது. பிறகு ஆர்.எஸ்.எஸ்.சின் சமூகப் பார்வைக்கு நேரெதிராக இருந்த தேசிய இயக்கத்துக்கும், ஆர்.எஸ்.எஸ்.சுக்கும் பொதுவான அம்சம் என்பது ஏதுமில்லை.

1940 அக்டோபரிலிருந்து காங்கிரஸ் தனிநபர் சத்தியாகிரகத்தைத் துவக்கியது. 1942 மத்தியில் 20000 பேருக்கு மேல்

கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். காந்தியவாதிகளிலிருந்து கம்யூனிஸ்டுகள் வரை அனைத்து தேசியவாதிகளும் அதிலிருந்தனர். ஆனால் ஊரில் பெரிதாகக் காட்டப்பட்ட ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் அதில் இல்லவே இல்லை. இதுதான் கோல்வால்கர் மற்றும் அவரது தொண்டர்களின் தேசபக்தி.

பிறகு ஆகஸ்ட் 1942ல் காங்கிரஸ் 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானம் இயற்றியதும் அனைத்து காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். இது நாடு முழுவதிலும் மக்கள் எழுச்சிக்கு இட்டுச் சென்றது. அதைத் தொடர்ந்து அரசு கடும் அடக்குமுறையை ஏவியது. அரசின் கணக்கின்படியே நாடு முழுவதும் 10600 பேர்துப்பாக்கிச் சூட்டில் பலியாயினர்.

1945ல் இந்திய தேசிய இராணுவத்தின் கைதிகளுக்கு ஆதரவாகவும் 1946 முற்பகுதியில் ராயல் இந்திய கப்பற்படை எழுச்சிக்கு ஆதரவாகவும் ஏற்பட்ட எழுச்சியில் ஆர்.எஸ்.எஸ். எங்கும் காணப்படவில்லை. ஆகஸ்ட் 1947ல் இந்தியா விடுதலை பெறுவதையே மற்ற பிரிட்டிஷ் விசுவாசிகளைப் போல் கோல்வால்கர் நம்ப மறுத்ததாக தமது ராஷ்டிரிய ஸ்வயம் சேவக் சங்கில் எழுதியுள்ளார். அவர்களைப் போலவே அவர் "அவர்கள் அரசைக் கொடுத்து விட்டுச் செல்லும் அந்தப் பேதைகள் இரண்டு மாதங்களுக்குக் கூடத் தாக்குப் பிடிக்க மாட்டார்கள். கூப்பிய கைகளுடன் பிரிட்டிஷிடம் தவழ்ந்து சென்று தயவுசெய்து திரும்பி வாருங்கள் என்று அவர்கள் கூறுவார்கள்" என்று கூறினார்.

1946 இறுதியிலும் 1947லும் நாட்டில் பரவிய கலவரங்களில் முஸ்லீம்களைக் கொல்லுமாறு வெளிப்படையான அறைகூவல் விடுத்தது ஆர்.எஸ்.எஸ். எங்கெல்லாம் படுகொலை நடந்ததோ அங்கெல்லாம் ஆர்.எஸ்.எஸ்.சின் பெயர் உச்சரிக்கப்பட்டது. விடுதலைக்குப் பின் சில மாதங்களில் ஆர்.எஸ்.எஸ்.சுக்கு எதிராக 600-700 வழக்குகள் பதியப்பட்டன. அவற்றில், அவர்கள் ஆயுதம் சேகரித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. 1948 பிப்ரவரி 4 அன்று இந்திய அரசு ஒரு அதிகாரபூர்வ அறிவிப்பில் கூறியது "ஆர்.எஸ்எஸ்.சின் உறுப்பினர்கள் வன்முறை, திருட்டு, கொள்ளை, கொலைகளில் ஈடுபட்டதாக கண்டறியப்பட்டுள்ளது.

காந்தி 1948 ஜனவரி 13 லிருந்து 18 வரை தில்லியில் அமைதிக்காக உண்ணாவிரதம் மேற்கொண்டார். தில்லியில் ஆர்.எஸ். எஸ் காரர்களும் மகாசபையினரும் பொதுக் கருத்தின் புதிய திருப்பத்தின் நிர்ப்பந்தத்தால் அனைத்து வகுப்பினருக்கிடையில் அமைதி, ஒற்றுமை மற்றும் சகோதரத்துவ ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டி வந்தது. அது நடந்தால்தான் காந்தி உண்ணாவிரதத்தை கைவிடுவார். ஆர்.எஸ்.எஸ்.சுக்கு ஏற்பட்ட இந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை. ஜனவரி 30, 1948 அன்று காந்தி ஆர்.எஸ்.எஸ்சின் சுயம்சேவக்கும் வி.டி.சாவர்க்கரின் சீடருமான கோட்சேயால் சுட்டுக் கொல்லப்பட்டார். காந்தியின் படுகொலை ஆர்.எஸ்.எஸ் மற்றும் பா.ஜ.க. எப்போதும் உதறிவிட முடியாத ஒரு கறை.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் உள்ள பள்ளிப் பாடப் புத்தகத்தில் மகாத்மா காந்தி மறைந்தார் என்ற செய்தி மட்டுமே இடம் பெற்றுள்ளது என்பது சுடும் நிஜம். பா.ஜ.க. ஆளும் மாநிங்களில் கோட்சே தேசப்பற்றாளனாகச் சித்தரிக்கப்பட்டு சிலைகள் எழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவர்கள்தான் தேசப்பற்று குறித்து வரையறை செய்கிறார்கள். எச்சரிக்கையாக இருக்க வேண்டியது மதச்சார்பற்றோரின் மனித நேய விரும்பிகளின் கட்டாயக் கடமை. மேலும் மதச்சார்பின்மையைப் புதுப்பித்து உயர்த்திப் பிடிக்க மகாத்மா காந்தி மீண்டும் மீண்டும் நினைக்கப்படுவதும் அவரின் அடியொற்றி கொள்கை உறுதியுடன் பயணிப்பதும் அவசியமாகும்.❖

## 13ஆம் மாநில மாநாடு மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள் விவர தொகுப்பு

| | |
|---|---|
| மொத்த பிரதிநிதிகள் | 485 |
| படிவங்கள் பெறப்பட்ட பிரதிநிதிகள் எண்ணிக்கை | 467 |

**பாலினம்**

| | |
|---|---|
| ஆண் | 386 |
| பெண் | 81 |

**வயது**

| | |
|---|---|
| 18 - 25 | இல்லை |
| 26 - 35 | 31 |
| 36 - 45 | 115 |
| 46 - 55 | 233 |
| 56 - 60 | 88 |

**கல்வி**

| | |
|---|---|
| பள்ளி இறுதி படிப்பு | 117 |
| 12ஆம் வகுப்பு | 55 |
| பட்டயப் படிப்பு | 47 |
| தொழிற்கல்வி | 31 |
| பட்டப் படிப்பு (இளநிலை) | 148 |
| பட்ட மேற்படிப்பு (முதுநிலை) | 69 |

**அரசு ஊழியர் சங்கப் பொறுப்பு**

| | |
|---|---|
| மாநில நிர்வாகிகள் | 14 |
| மாவட்ட நிர்வாகிகள் | 221 |
| வட்ட நிர்வாகிகள் | 187 |
| மொத்தம் | 422 |

**துறைவாரி சங்க நிர்வாகிகள்**

| | |
|---|---|
| மாநிலம் | 155 |
| மாவட்டம் | 194 |
| வட்டம்/ஒன்றியம் | 52 |
| மொத்தம் | 401 |
| பணிநீக்கம் செய்யப்பட்டோர் | 163 |
| சிறை சென்றோர் | 179 |
| மறியலில் பங்கேற்றோர் | 460 |

**பத்திரிகை**

| | |
|---|---|
| அரசு ஊழியர் | 463 |
| எம்ப்ளாயீஸ் போரம் | 292 |

**சமூகப் பொறுப்பு**

| | |
|---|---|
| இரத்த தானம் | 244 |
| உறுப்பு தானம் | 5 |
| உடல் தானம் | 12 |
| கண் தானம் | 35 |

**ஊதிய விவரம்**

| | |
|---|---|
| காலமுறை ஊதியம் | 383 |
| சிறப்பு காலமுறை ஊதியம் | 78 |
| தொகுப்பூதியம் | 6 |
| மொத்தம் | 467 |

**ஓய்வூதிய விவரம்**

| | |
|---|---|
| பழைய ஓய்வூதியம் | 269 |
| புதிய ஓய்வூதியம் | 126 |
| சிறப்பு ஓய்வூதியம் | 72 |
| மொத்தம் | 467 |

**வயதில் இளையோர்**

1. கு.சேரந்தையராஜா (கன்னியாகுமரி) 15.7.1993
2. சந்தோஷ்குமார் (ஈரோடு) 24.11.1993

**வயதில் மூத்தோர்**

1. ஜி. ஆண்டாள் (வேலூர்) 30.09.2019 பணி ஓய்வு
2. சு.கிருஷ்ணன் (தென்சென்னை) 31.12.2019 பணி ஓய்வு

**உடல் தானம்**

பா.இராணி, நாகை
சா.கோதண்டபாணி, தஞ்சாவூர்
டி.இளங்கோவன், தஞ்சாவூர்
ஆர்.சேகர், திருவண்ணாமலை
சா.பாரி, திருவண்ணாமலை
ஆர்.பாலாஜி, மதுரை
மு.வீரகடம்பு, திண்டுக்கல்
பா.பிச்சை, சிவகங்கை
பிரபாகர், சிவகங்கை
சு.குணசேகரன், புதுக்கோட்டை
உஷாராணி, ஈரோடு
ப.மகேஸ்வரன், திருப்பூர்
முத்துராஜா, கோவை
வெ.செந்தில்குமார், கோவை
எஸ்.தமிழ்ச்செல்வி, தருமபுரி

**இரத்த தானம்**

மனோன்மணி, சேலம், 27 முறை
ப.அந்துவன்சேரல்
தா.முகிலன்
ஜி.வெங்கடேஷ்முருகன்
தீபாகரன்
ராஜீவ்காந்தி
சுரேஷ்

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

(பதிவு எண் : 237/84)

## 13ஆம் மாநில மாநாடு

## மாநில பிரதிநிதித்துவப் பேரவை

தஞ்சாவூர் 2019 செப்டம்பர் 27-29

நாள் 29.09.2019

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

## 2019-2021ஆம் ஆண்டுகளுக்கான மாநில நிர்வாகப் பொறுப்புகளுக்கான தேர்தல்

## தேர்தல் ஆணையாளரின் அறிவிக்கை

அன்பிற்கினிய மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்களே! வணக்கம்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில நிர்வாகப் பொறுப்புகளுக்கான மாநில நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை 13ஆம் மாநில மாநாடு மற்றும் மாநில பிரதிநிதித்துவப் பேரவை நடைபெறும் இடமான ஜெயராம் மகால் (தோழர் வெ.கோபால்சாமி அரங்கம்) தஞ்சாவூரில் பின்வரும் நிகழ்வுகளின் அடிப்படையில் நடைபெறவுள்ளது.

**மாநில நிர்வாகப் பொறுப்புகளுக்கான தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிர்வாகிகள் எண்ணிக்கை**

| | | |
|---|---|---|
| **மாநிலத் தலைவர்** | - | 1 |
| **பொதுச் செயலாளர்** | - | 1 |
| **பொருளாளர்** | - | 1 |
| **மாநில துணைத் தலைவர்கள்** | - | 6 |
| **மாநிலச் செயலாளர்கள்** | - | 6 |
| **மொத்தம்** | - | 15 |
| மாநில தணிக்கையாளர்கள் | - | 2 |

**கீழ்க்காணும் நிகழ்வுகள் அடிப்படையில் மாநிலத் தேர்தல் நடைபெறும்**

இடம் : ஜெயராம் மகால் (தோழர் வெ.கோபால்சாமி அரங்கம்) தஞ்சாவூர்

1. வேட்பு மனுத் தாக்கல்
   29.09.2019 ஞாயிற்றுக்கிழமை மதியம் 4.15 மணி முதல் 5.00 மணி வரை
2. வேட்பு மனுக்கள் பரிசீலனை
   29.09.2019 ஞாயிற்றுக்கிழமை மதியம் 5.00 மணி முதல் 5.30 மணி வரை
3. வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுதல்
   29.09.2019 ஞாயிற்றுக்கிழமை மதியம் 5.30 மணி முதல் 5.45 மணி வரை
4. வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடல்
   29.09.2019 ஞாயிற்றுக்கிழமை மதியம் 5.45 மணி முதல் 5.50 மணி வரை
5. வாக்குப் பதிவு
   29.09.2019 ஞாயிற்றுக்கிழமை மதியம் 5.50 மணி முதல் பிற்பகல் 6.15 மணி வரை
6. வாக்கு எண்ணிக்கை
   29.09.2019 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6.20 மணி முதல்
   முடிவு தெரியும் வரை வாக்கு எண்ணிக்கை

குறிப்பு

✦ **2019ஆம் ஆண்டு உறுப்பினர் சந்தா கட்டாயம் செலுத்தியிருக்கப்பட வேண்டும்.**

✦ **வேட்பாளர், முன்மொழிபவர் மற்றும் வழிமொழிபவரது உறுப்பினர் எண் தெரிவிக்கப்பட வேண்டும்.**

✦ **தேர்தல் நடைபெறும் நாளில் 2 ஆண்டுகளுக்கு குறையாமல் அரசுப் பணியில் இருக்கக் கூடியவர்கள் மட்டுமே வேட்பாளராக போட்டியிடலாம்.**

✦ **மாநில நிர்வாகிகள், மாநில செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் பங்கேற்றவர்கள் மட்டுமே வாக்களிக்க தகுதியுடையவர்கள்.**

✦ **ஒருவர் ஒரு பதவிக்கு மட்டுமே போட்டியிட முடியும்.**

✦ **மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் பங்கேற்றவர்கள் மட்டுமே வேட்பாளரை முன்மொழிபவர் மற்றும் வழிமொழிபவர்களாக இருக்க வேண்டும்.**

✦ **ஒருவர் ஒரு வேட்பாளரை மட்டுமே முன்மொழியவோ, வழிமொழியவோ முடியும். ஒன்றுக்கு மேற்பட்டவர்களை முன்மொழிந்து, வழிமொழிந்திருந்தால் வேட்பு மனு நிராகரிக்கப்படும்.**

✦ **தேர்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் தேர்தல் ஆணையாளரின் முடிவே இறுதியானது.**

| (ஒம்) | (ஒம்) | (ஒம்) |
|---|---|---|
| **ச.முருகதாஸ்** | **சு.கிருஷ்ணன்** | **எம்.தங்கராஜ்** |

பெறுநர்

மாநில நிர்வாகிகள் மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர்கள்
மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள்

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

(பதிவு எண் : 237/84)

## 13ஆம் மாநில மாநாடு

## மாநில பிரதிநிதித்துவப் பேரவை

தஞ்சாவூர் 2019 செப்டம்பர் 27-29

## மாநில நிர்வாகிகள் தேர்தல் - 29.09.2019

## வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் எண்ணிக்கை விவரம்

### மாநிலத் தலைவர்

| | | | |
|---|---|---|---|
| 1. மு.அன்பரசு | 276 | 2. எஸ்.தமிழ்ச்செல்வி | 175 |

### மாநில துணைத் தலைவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. மொ.ஞானத்தம்பி | 312 | 7. என்.குமாரவேல் | 148 |
| 2. ஏ.பெரியசாமி | 304 | 8. க.கங்காதரன் | 144 |
| 3. கோ.பழனியம்மாள் | 303 | 9. சு.ஜெயராஜராஜேஸ்வரன் | 146 |
| 4. மு.சீனிவாசன் | 306 | 10. ஆ.தமிழரசன் | 140 |
| 5. ஆர்.மங்களபாண்டியன் | 300 | 11. தி.கலைச்செல்வி | 155 |
| 6. என்.வெங்கடேசன் | 297 | 12. பி.செந்தில்குமார் | 144 |

### பொதுச் செயலாளர்

| | | | |
|---|---|---|---|
| 1. ஆ.செல்வம் | 298 | 2. எம்.வெங்கடேசன் | 141 |

### மாநிலச் செயலாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. சி.ஆர்.இராஜகுமார் | 305 | 7. ஏ.சோலையன் | 148 |
| 2. சி.பரமேஸ்வரி | 302 | 8. ஆர்.தாமோதரன் | 148 |
| 3. இரா.ந.நம்பிராஜன் | 305 | 9. ப.துளசி | 142 |
| 4. உ.சண்முகம் | 301 | 10. என்.ஜனார்த்தனன் | 148 |
| 5. தெ.வாசுகி | 295 | 11. கோ.மோகனமூர்த்தி | 152 |
| 6. சி.எஸ்.கிறிஸ்டோபர் | 295 | 12. எஸ்.தமிழ்ச்செல்வன் | 149 |

### மாநில பொருளாளர்

| | | | |
|---|---|---|---|
| 1. மு.பாஸ்கரன் | 296 | 2. மு.வீரகடம்பகோபு | 149 |

### மாநில தணிக்கையாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. எஸ்.முபாரக் அலி | 324 | 3. பா.பிச்சை | 138 |
| 2. கு.மகாலிங்கம் | 329 | | |

தேர்தல் ஆணையர் தேர்தல் ஆணையர் தேர்தல் ஆணையர்

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

(பதிவு எண் : 237/84)

## 13ஆம் மாநில மாநாடு

## மாநில பிரதிநிதித்துவப் பேரவை

தஞ்சாவூர் 2019 செப்டம்பர் 27-29

### மாநில நிர்வாகிகள் தேர்தல் - 29.09.2019 தேர்வான நிர்வாகிகள் விவரம்

| | | |
|---|---|---|
| மாநிலத் தலைவர் | மு.அன்பரசு | சமூக நலத்துறை, சென்னை |
| பொதுச் செயலாளர் | ஆ.செல்வம் | பொதுப்பணித்துறை, மதுரை |
| மாநிலப் பொருளாளர் | மு.பாஸ்கர் | ஊரக வளர்ச்சி, திருவண்ணாமலை |
| மாநில துணைத் தலைவர்கள் | மொ.ஞானத்தம்பி | மருத்துவத்துறை, திருப்பூர் |
| | ஏ.பெரியசாமி | சத்துணவு, திருச்சி |
| | ஆர்.மங்களபாண்டியன் | வருவாய்த்துறை, திண்டுக்கல் |
| | என்.வெங்கடேசன் | பொது சுகாதாரத்துறை, தூத்துக்குடி |
| | எம்.சீனிவாசன் | தொழிற்பயிற்சி, திருப்பூர் |
| | கோ.பழனியம்மாள் | கூட்டுறவுத் துறை, தருமபுரி |
| மாநிலச் செயலாளர்கள் | சி.ஆர்.ராஜகுமார் | கல்வித்துறை, குமரி |
| | ஆர்.என்.நம்பிராஜன் | மருத்துவத்துறை, சென்னை |
| | சி.எஸ்.கிறிஸ்டோபர் | தொழில்நுட்ப கல்வித்துறை, குமரி |
| | சி.பரமேஸ்வரி | பொது சுகாதாரத் துறை, நீலகிரி |
| | உ.சண்முகம் | பொது சுகாதாரத் துறை, திருவாரூர் |
| | டி.வாசுகி | இந்து சமய அறநிலையத் துறை, திருவள்ளூர் |

| | | |
|---|---|---|
| தணிக்கையாளர்கள் | எஸ்.முபாரக் அலி | மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, திண்டுக்கல் |
| | கே.மகாலிங்கம் | பொது சுகாதாரத் துறை, விழுப்புரம் |

தேர்தல் ஆணையர்     தேர்தல் ஆணையர்     தேர்தல் ஆணையர்

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின்

# மாவட்ட மாநாடுகள்

### மதுரை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மதுரை மாவட்ட 13வது மாநாடு செப்டம்பர் 6 மற்றும் 7ம் தேதிகளில் மதுரையில் நடைபெற்றது. முதல்நாள் நிகழ்வாக பிரதிநிதிகள் மாநாடு உலக தமிழ் சங்க கட்டிடத்தில் நடந்தது. இதில் முதல் நிகழ்வாக AISGEF கொடியை மாவட்ட தலைவர் ஜெயராஜராஜேஸ்வரன் ஏற்றிவைக்க TNGEA கொடியை மாவட்ட செயலாளர் நீதிராஜா ஏற்றிவைத்தார். அங்கிருந்த திருவள்ளுவர் சிலைக்கு மாநில தலைவர் (பொறுப்பு) ஆ.செல்வம் மாலை அணிவித்தார்.



மாவட்ட தலைவர் ஜெயராஜராஜேஸ்வரன் தலைமையில் மாநாடு தொடங்கியது. மாவட்ட துணைத் தலைவர் சோலையன் அஞ்சலி தீர்மானம் வாசிக்க, மாவட்ட இணைச் செயலாளர் நூர்ஜஹான் வரவேற்புரை ஆற்ற மாநில துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி துவக்க உரையாற்றினார்.

வேலை அறிக்கையை மாவட்ட செயலாளர் நீதிராஜா சமர்ப்பிக்க, வரவு செலவு அறிக்கையை பொருளாளர் ராம்தாஸ் சமர்ப்பித்தார். விவாதம் தொகுப்புரை என நிறைவுற்று, 2019 ஜாக்டோ ஜியோ போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற ஊதியம் இழந்த பிரதிநிதிகளை கௌரவப்படுத்தப்பட்டது. மாநில தலைவர் செல்வம் நிறைவுரையுடன் மாவட்ட இணைச் செயலாளர் பாண்டியம்மாள் நன்றி கூறி முதல் நாள் நிகழ்வு இனிதே முடிந்தது.

இரண்டாம் நாள் ஏழாம் தேதி மதியம் 2 மணிக்கு மகளிர் மாநாடு மகளிர் துணை குழு துணை அமைப்பாளர் மீனாட்சி தலைமை ஏற்று மாநில மகளிர் துணை குழு உறுப்பினர் ரா.பாண்டியம்மாள் துவக்க உரையாற்ற மாவட்ட மகளிர் துணை குழு அமைப்பாளர் ஆ.அமுதா செயல் அறிக்கை வாசிக்க முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தோழர் க.பாலபாரதி சிறப்புரையாற்ற ஆ.தமிழ்ச்செல்வி நன்றியுடன் மாநாடு இனிதே நிறைவுற்றது.

அடுத்த நிகழ்வாக பொது மாநாடு அதற்கான பேரணி காந்தி அருங்காட்சியகம் முன்பிருந்து தொடங்கப்பட்டது. ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளரும் தமிழ்நாடு முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநில தலைவருமான சுரேஷ் கொடியசைத்து துவக்கி வைத்தார். மேளதாளம் முழங்க தோழர்களின் உரிமை கோசத்துடன் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பொது மாநாடு நடக்கும் திடலில் நிறைவுற்றது. பொது மாநாட்டினை மாவட்ட தலைவர் ஜெயராஜராஜேஸ்வரன் தலைமை ஏற்க மாவட்ட துணை தலைவர் பாலாஜி வரவேற்புரை ஆற்ற தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் எம்.பி.முருகையன் வாழ்த்துரை வழங்க மாவட்ட செயலாளர் நீதிராஜா தீர்மானங்களை விளக்கி பேச மாநிலத் தலைவர் ஆ.செல்வம் புதிய நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி நிறைவுரை ஆற்றினார். மாவட்ட பொருளாளர் ராம்தாஸ் நன்றி கூற மாநாடு இனிதே நிறைவுற்றது.

### நாகப்பட்டினம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்ட 13-வது மாநாட்டின் ஒரு பகுதியாக மகளிர் மாநாடு நாகை அரசு ஊழியர் சங்க





கூட்ட அரங்கில் 14.09.19 அன்று மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பா.ராணி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டத் தணிக்கையாளர் சி.வாசுகி வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநிலச் செயலாளர் சா.சித்ரா துவக்கவுரையாற்றினார்.

உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்படி பணிபுரியும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்களை விசாரிக்க உடனடியாக மாவட்டத்தில் விசாகா கமிட்டியை அமைக்க வேண்டும், பெண்கள் பணிபுரியும் அலுவலக வளாகத்தில் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்த வேண்டும், பாலியல் வன்முறை உள்ளிட்டு பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகளை விரைந்து விசாரித்து தண்டனைகள் வழங்க வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சமூக செயல்பாட்டாளர் த.லீலாவதி நிறைவுரையாற்றினார். இறுதியாக மாவட்ட இணைச் செயலாளர் ஆர்.கலா நன்றியுரையாற்றினார்.

## கடலூர்

13வது மாவட்ட மாநாடு கடலூர் சங்க அலுவலகத்தில் 14.09.19 அன்று காலை 11.00 மணிக்கு மாவட்ட தலைவர் ஆர்.பாலசுப்ரமணியன் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக சங்க கொடி ஏற்றும்




நிகழ்ச்சிக்கு பின் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

## தருமபுரி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தருமபுரி மாவட்ட 12-வது மாநாடு தருமபுரி பெரியார் மன்றத்தில் நடைபெற்றது. எம்.வெற்றிவேல் நினைவரங்கத்தில் கே.சுவாமிநாதன் மேடையில் நடைபெற்ற இம்மாநாட்டிற்கு மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் எம்.யோகராசு வரவேற்றார். சிஐடியு மாவட்ட செயலாளர் சி.நாகராசன் துவக்கி வைத்து பேசினார். மாவட்ட செயலாளர் ஏ.சேகர் வேலை அறிக்கை வாசித்தார். பொருளாளர் கே.புகழேந்தி நிதிநிலை அறிக்கை சமர்பித்தார்.

ஓய்வூதியர் கூட்டமைப்பு மாவட்ட தலைவர் எஸ்.பழனிச்சாமி, இன்சூரன்ஸ் ஊழியர் சங்க கோட்ட இணை செயலாளர்






ஏ.மாதேஸ்வரன், பிஎஸ்என்எல்இயூ மாவட்ட செயலாளர் பி.கிருஷ்ணன், ஜாக்டோ-ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பி.எம்.கௌரன், தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்ட தலைவர் எஸ்.கவிதா, ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

மாவட்ட துணைத் தலைவர்கள் எம்.சிவப்பிரகாசம், பி.எஸ்.இளவேனில், மாவட்ட இணை செயலாளர்கள் எம்.முனிராஜ், பி.இராஜேஸ்வரி, என்.சுபாஷ்சந்திரபோஷ் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். மாநில துணைத் தலைவர் எஸ்.பாரத்திபன் நிறைவுறையாற்றினார்.

மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்ட தலைவராக எம்.சுருளிநாதன், மாவட்ட செயலாளராக ஏ.சேகர், பொருளாளராக கே.புகழேந்தி, மாவட்ட துணைத் தலைவர்களாக எம்.சிவப்பிரகாசம், பி.எஸ்.இளவேனில், எஸ்.சரவணன், அண்ணாகுபேரன், மாவட்ட இணைச் செயலாளர்களாக சி.காவேரி, ஜி.பழனியம்மாள், எஸ்.குணசேகரன், ஜெயந்தி, தணிக்கையாளர்களாக எம்.முருகன், எம்.முனிராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

முன்னதாக மகளிர் சிறப்பு மாநாடு நடைபெற்றது. மகளிர் துணைக்குழு மாவட்ட அமைப்பாளர் பி.எஸ்.இளவேனில் தலைமை வகித்தார். மாநில அமைப்பாளரும், அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவருமான எஸ்.தமிழ்செல்வி, மகளிர் துணைக் குழு உறுப்பினர்கள் ஜி.பழனியம்மாள், பி.மகேஸ்வரி ஆகியோர் பேசினர்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் எம்.யோகராசு அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது. எம்.யோகராசு அவர்களுக்கு நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. மாவட்ட இணை செயலாளர் சி.காவேரி நன்றி கூறினார். ❖

---

## வாசகர் கடிதம்

தடைகளை தகர்த்தெறியும் தஞ்சை தரணி மாநாடு செய்தி படித்தேன். அற்புதமாக இருந்தது. இன்னொரு மன்னாட்சிக்கு தயாராவோமா என்ற பொதுச் செயலாளர் மேசையிலிருந்து கட்டுரை இட்லர் மற்றும் முசோலினியின் அழிவு வரலாற்றை சுட்டிக்காட்டியது. இந்த பந்தம் உன்னதமானது கட்டுரை தோழமைக்கு உதாரணமாய் இருந்தது. மகாகவி மரணமில்லை கட்டுரை படித்து பல உண்மைகளை தெரிந்து கொண்டேன். இது மட்டுமின்றி பல்வேறு தகவல்களை சென்ற மாத இதழில் வெளியிடதற்கு நன்றி.

- **ரா.தட்சிணாமூர்த்தி**, கடலூர்

செப்டம்பர் 2019 மாத அரசு ஊழியர் இதழில் “மீட்போம் இந்தியா” பெரணமல்லூர் சேகரன் கவிதை அருமை. நாட்டில் நடைபெறும் அதிகார வர்க்க ஆட்சிக்கு எதிராக போரிட்டு மீட்போம். தூத்துக்குடி மாவட்ட புதிய பொலியுடன் கட்டடம் திறப்பு விழா பகுதி அருமை. இதற்காக உழைத்திட்ட அனைத்து தோழர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி. மேலும் கட்டுரையில் கட்டிடம் மீட்கபட்ட வரலாறு தெளிவாக வெளிக்கொண்டுவந்து புதிய தோழர்களுக்கு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் பட்ட கஷ்டநஷ்டங்கள் தெரிந்துகொள்ளும்படி இருந்தது. எச்சிறைக்கும் அஞ்சாமல், எத்தனை அடக்குமுறைகளுக்கும் அஞ்சாமல் போராடி கட்டிடத்தினை மீட்ட தோழர்களுக்கு என்றும் நினைவில் கொள்ளும் வகையில் பெயர் சூட்டியது அருமை.

தனியார்மயத்தை ஊக்குவிக்கும் தேசிய மருத்துவ குழு சட்டம் 2019 தோழர் சுகி கட்டுரை தேசிய மருத்துவ குழு சட்டத்தினால் ஏற்படும் பாதிப்புகள், அதனால் மாநில அரசிடமிருந்து பறிக்கப்படும் உரிமைகள், இந்திய வரலாற்றின் சமூக மாற்றத்திற்கு வித்திட்ட இடஒதுக்கீட்டை மறுத்து உருவாக்கப்பட்ட இச்சட்டம் எவ்வகையில் அனைத்து மக்களுக்கும், மருத்துவ மாணவர்களுக்கு பயனளிக்கும் என்பது கேள்விக்குரியது.

- முனைவர் **கா.பால் பாண்டி**, திருச்சி

# தஞ்சை தரணியில் நடைபெற்ற திருப்புமுனை மாநாட்டின் சிறப்பு அம்சங்கள்

சீர்மிகு முறையில் சிறப்பான வகையில் தஞ்சாவூரில் 2019 செப்டம்பர் 27 முதல் 29ஆம் தேதி வரை நடைபெற்ற 13ஆம் மாநில மாநாடு அரசு ஊழியர்களாகிய நம் அனைவரும் அடுத்து பயணிக்க வேண்டிய இலக்கிற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்துள்ளது. இந்த மாநாடு எல்லோரும் மெச்சும் வகையில் சீரும் சிறப்புமாக நடைபெற்று முடிந்திருந்த போதிலும் இதன் நினைவலைகள் அடுத்த மாநில மாநாடு வரைக்கும் நம் நெஞ்சில் ரீங்காரமிட்டுக்கொண்டே இருக்கும்.

நன்றாக நினைவிருக்கிறது 24.2.2019 அன்று சென்னையில் நடைபெற்ற நமது மாநில செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்ட விஷயம்தான் தஞ்சையில் 13ஆம் மாநில மாநாட்டை நடத்துவது என்று. இதற்கான தேதியை முடிவு செய்வதில் கொஞ்சம் காலதாமதமானது. ஏனெனில் 2019ல் ஆண்டின் பிற்பகுதியில் தொடர்ச்சியான ஜாக்டோ ஜியோ போராட்டத்தின் தொடர் போராட்டங்கள் மற்றும் அரசின் பழி வாங்கும் நடவடிக்கைகளுக்கு இடையிலும் 16.6.2019 அன்று சென்னையில் கூடிய மாநில செயற்குழுவில் 2019 செப்டம்பர் 27, 28 மற்றும் 29 தேதிகளில் நடத்துவது உசிதமானதாக இருக்கும் என்று முடிவெடுக்கப்பட்டது.

மாநாட்டு வரவேற்புக்குழுக் கூட்டம் மாநில நிர்வாகிகள் முன்னிலையில் 22.6.2019 அன்று தஞ்சாவூரில் அமைக்கப்பட்டது. இதில் நாகை, திருவாரூர், திருச்சி, அரியலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வரவேற்புக் குழு தலைவராக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தஞ்சாவூர் மாவட்டச் செயலாளரும், அனைத்து ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டத் தலைவருமான தோழர் இரா.தமிழ்மணி ஒருமனதாக நியமிக்கப்பட்டார். அதன்பிறகு வரவேற்புக் குழுவின் சார்பாக மாநாட்டு பணிகளை திட்டமிடவும் நிதியளிப்பு பெறவும் கூட்டங்கள் கூட்டப்பட்டன.

மாநில பிரதிநிதித்துவப் பேரவை தஞ்சாவூரில் உள்ள ஜெயராம் மகாலில் நடந்தது. ஓரியண்டல் டவர். சரோஜ் நினைவகம் (எல்ஐசி ஊழியர் சங்கம்) ஆகிய இடங்களில் பிரதிநிதிகள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஜெயராம் மகாலில் பெண் பிரதிநிதிகள் தங்குவதற்கும், அதேபோல் மாநில நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் தங்க அரசு பயணியர் மாளிகை தங்கும் விடுதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

பிரதிநிதிகள் மாநாட்டு மேடை ஓவியர் தோழர் வெண்புறா அவர்கள் வரைந்த கருத்தோவியம் கம்பீரமாய் அரங்கத்திற்கு மெருகூட்டியது. மாநாட்டு அரங்கின் நுழைவு வாயிலின் முன்பு நிறுத்தப்பட்டடிருந்த தியாகிகள் ஸ்தூபி காண்போரின் கவனத்தை ஈர்த்தது.

மாநாட்டுக்கான விளம்பரங்களும் தஞ்சாவூர் நகரிலும் மாநாடு நடக்கும் மண்டபத்தை சுற்றிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தஞ்சாவூர் நகரில் மட்டும் பல இடங்களில் சுவரெழுத்து விளம்பரங்கள் வரையப்பட்டிருந்தன.

மாநாட்டு அரங்கம் தோழர் வெ.கோபால்சாமி அவர்களின் நினைவாக அமைக்கப்பட்டிருந்தது. மாநாட்டு நிகழ்வுகள் கலை நிகழ்ச்சிகளுடன் செவிக்கு உணவு படைக்கும் வகையில் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க. சமையல் கலைஞர் தோழர் மெரினா ஆறுமுகம் வகை வகையான உணவுகளை தயாரித்துக் கொடுத்து மறுபுறத்தில் மூக்கிற்கும் நாக்கிற்கும் நறுமண சுவை அசைவ விருந்து வைத்துக்கொண்டிருந்தார். செவிக்கு உணவில்லாதபோது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. வயிற்றுக்கு உணவில்லாத போது சிறிது செவிக்கு ஈயலாம் என்கிற சபலத்தை சில பிரதிநிதிகளுக்கு ஏற்படும் வண்ணம் மெரினாவின் சுவைகாற்று எல்லோருடைய சுவாசத்திலும் வாசம் செய்தது.

27.9.2019 அன்று காலையில் மாநாட்டின் துவக்க நிகழ்ச்சியாக நிகழ்ச்சி நிரலின்படி 10 மணிக்கு கொடியேற்ற நிகழ்வின்படி நேர மேலாண்மையை கடைப்பிடித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கொடியை மாநிலத் தலைவர் (பொறுப்பு) தோழர் ஆ.செல்வம் அவர்களும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனக் கொடியை அகில இந்திய துணைத் தலைவர் தோழர் மு.அன்பரசு அவர்களும் ஏற்றி வைத்தனர்.

அரங்கின் வெளியே பாரதி புத்தகாலயம் உள்ளிட்ட அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. குழந்தை இயேசு ஆலயத்திலிருந்து பேரணி துவங்கி பொது மாநாடு நடைபெற்ற இடமான நகராட்சி திடலை அடைந்தது. பொது மாநாட்டு அரங்கில் 2000 நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. ஃபோகஸ் விளக்குகள் ஒளி வெள்ளம் பாய்ச்சின. பொது மாநாட்டு மேடையில் தோழர் ஏ.ராமசாமியின் உருவப் படம் பளிச்சிட்டன. மாநாட்டு நிகழ்வுகளை முன்கூட்டியே திட்டமிட்டு எவ்வித தொய்வுமின்றி செவ்வனே செய்து முடித்த தஞ்சாவூர் அரசு ஊழியர் சங்க மாவட்ட நிர்வாகிகள், துறைவாரி சங்க நிர்வாகிகள். தோழமை சங்க நிர்வாகிகள், வட்டக் கிளை நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் மாநாடு சிறக்க உழைத்த அத்துணை தோழர்களுக்கும் தனிப்பட்ட முறையிலான பாராட்டுக்களையும் நன்றியினையும் அரசு ஊழியர் சங்க மாநில செயற்குழு உரித்தாக்குகிறது.

### மாநில பிரதிநிதித்துவப் பேரவை நிகழ்வுகள் : பொது அமர்வு

மாநில பிரதிநிதித்துவ பேரவை துவக்க நிகழ்வாக 27.9.2019 அன்று மாநிலத் தலைவர் (பொறுப்பு) ஆ.செல்வம் அவர்களின் தலைமையில் துவங்கியது. மாநில செயலாளர் சி.ஆர்.ராஜகுமார் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். தொடர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

வரவேற்புக்குழு தலைவர் தோழர் இரா.தமிழ்மணி வரவேற்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து மாநிலத் தலைவர் தலைமையுரைக்குப் பிறகு மாநிலங்களவை உறுப்பினரும், சிஐடியு அகில இந்திய துணைத் தலைவருமான தோழர் டி.கே.ரங்கராஜன் அவர்கள் துவக்கவுரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க சமூக வலைதள தொடக்க விழாவினை தொடங்கிவைத்து அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன பொதுச் செயலாளர் தோழர் ஏ.ஸ்ரீகுமார் சிறப்புரையாற்றினார். அதனையடுத்து தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாநிலத் தலைவர் தோழர் நெ.இல.சீதரன், தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொதுச் செயலாளர் தோழர் ச.மயில், ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் -கு.வெங்கடேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

### புத்தக வெளியீடு

*நாகப்பட்டிணம் மாவட்டச் செயலாளர் ஏ.ட்டி.அன்பழகன் அவர்கள் எழுதிய "தோழர் ஆர்.எம்.எஸ். வார்த்தையும் வாழ்க்கையும் ஒன்றாய்..." என்ற புத்தகத்தை AISGEF பொதுச் செயலாளர் தோழர் ஏ.ஸ்ரீகுமார் வெளியிட. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க பொதுச் செயலாளர் மு.அன்பரசு அவர்கள் பெற்றுக் கொண்டார்.*

*தென் சென்னை மாவட்டத்தில் பணியாற்றி வரும் மதுரை முனைவர் சு.கிருஷ்ணன் அவர்கள் எழுதிய "மகாத்மா காந்தி வேலை வாய்ப்புத் திட்டம் கிராமப்புற மக்களின் வேலை வாய்ப்பில் வாழ்வியலில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் - ஆய்வு" என்ற புத்தகத்தை மாநிலத் தலைவர் (பொறுப்பு) தோழர் ஆ.செல்வம் அவர்கள் வெளியிட, ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் கு.வெங்கடேசன் அவர்கள் பெற்றுக்கொண்ட நிகழ்வும் நடைபெற்றது.*

### பிரதிநிதிகள் அமர்வு

*துவக்க நிகழ்வை நிறைவு செய்து உணவு இடைவேளைக்குப் பிறகு பிரதிநிதித்துவப் பேரவை நிகழ்வுகள் பிற்பகல் 3.00 மணிக்கு துவங்கியது. பிரதிநிதித்துவப் பேரவை நிகழ்வுகளுக்கான பின்வரும் குழுக்கள் தேர்வு செய்யப்பட்டது.*

*மாநிலத் தலைவர் உள்ளிட்ட மாநில துணைத் தலைவர்கள் தலைமைக் குழுவாகவும்,*

*பொதுச் செயலாளர் உள்ளிட்ட மாநில செயலாளர்கள் வழிநடத்தும் குழுவாகவும்*

*மாநில துணைத் தலைவர் என்.குமாரவேல் தலைமையில் நாகப்பட்டினம் பி.அந்துவன்சேரல் பிரதிநிதிகள் விவரத் தொகுப்புக் குழுவாகவும்*

*மாநிலச் செயலாளர் தோழர் தி.கலைச்செல்வி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத் தோழர் ஆர்.நடராஜன் ஆகியோர் நடவடிக்கை பதிவுக் குழுவாகவும்*

*மாநிலப் பொருளாளர் எம்.தங்கராஜ், மேலாளர் வி.வெங்கடேசன் மற்றும் முன்னாள் மாநில பொருளாளர் வி.தேவன் ஆகியோர் நிதி வரவு-செலவு குழுவாகவும்*

*மாநில துணைத் தலைவர்கள் சு.பார்த்திபன் மற்றும் மு.சுப்பிரமணியன் ஆகியோர் தீர்மானக் குழுவாகவும் செயல்பட்டனர்.*

*இதனைத் தொடர்ந்து பொதுச் செயலாளர் அறிக்கை, வேலை அறிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கையினை தோழர்கள் மு.அன்பரசு, பொதுச்செயலாளர் மற்றும் எம்.தங்கராஜ், மாநிலப் பொருளாளர் ஆகியோர் முன்வைத்தனர்.*

### பிரதிநிதிகள் விவாதத்திற்கான நிமிடங்கள் பகிர்வு

*மாவட்டங்களின் விவாதத்திற்கான நிமிடங்கள் பகிர்வு என்பது 32 மாவட்டங்களுக்கும் சேர்த்து 230 நிமிடங்கள் (3 மணி 50 நிமிடங்கள்) உறுப்பினர் சேர்க்கையின் அடிப்படையில் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டது*

*உறுப்பினர் சேர்க்கை 2500க்கு கீழ் 5 நிமிடங்கள்*

*2500க்கு மேல் 10 நிமிடங்கள்*

## பிரதிநிதிகள் விவாதம்

*மொத்தமாக 41 தோழர்களில் 9 பெண்கள் விவாதத்தில் பங்கேற்றனர். மாலை 7 மணியளவில் மாநிலச் செயலாளர் எம்.சௌந்தரராஜன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் "மனு" இன்னும் சாகவில்லை என்ற தலைப்பில் பட்டிமன்ற பேச்சாளரும், தமுஎகச மாநிலத் துணைத் தலைவருமான தோழர் மதுக்கூர் இராலிங்கம் கருத்துரையாற்றினார்.*

## அரசு ஊழியர் மாத இதழ் பரிசளிப்பு

*அரசு ஊழியர் மாத இதழ் அதிக சந்தாக்கள் சேர்த்த மாவட்ட மையங்களுக்கு முதல் / இரண்டு / மூன்று என்ற அடிப்படையில் தேர்வு செய்து அம்மாவட்டத்தை ஊக்குவிப்பதன் நோக்கோடு பரிசளிப்பது என்று நமது செயற்குழு முடிவாகும். அதனடிப்படையில் 2018ஆம் ஆண்டில் அதிக சந்தா சேர்த்திட்ட மாவட்டங்களுக்கு பின்வரும் நிகழ்வுகளின்படி பரிசு வழங்கப்பட்டது.*

*1223 சந்தாக்கள் சேர்த்த தருமபுரி மாவட்டம் முதல் பரிசையும். 940 சந்தாக்கள் சேர்த்த கிருஷ்ணகிரி மாவட்டம் 2ஆம் பரிசையும். 720 சந்தாக்கள் சேர்த்த தஞ்சாவூர் மாவட்டம் 3ஆம் பரிசையும் பெற்றன.*

## மகளிர் அமர்வு

*பிரதிநிதித்துவப் பேரவை நிகழ்வுகளின் ஒரு பகுதியாக மகளிர் சிறப்பு கருத்தரங்கம் மாநில துணைத் தலைவர் எஸ்.தமிழ்செல்வி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் தோழர் தி.கலைச்செல்வி வரவேற்புரையாற்றினார். அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் அகில இந்திய துணைத் தலைவர் தோழர் உ.வாசுகி கருத்துரையாற்றினார். மாநில மகளிர் துணைக்குழு உறுப்பினர் தோழர் ச.செல்வி நன்றி கூறினார்.*

## சிறை சென்ற பெண் தோழருக்கு சிறப்பு

*தமிழகத்தில் நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. இப்போராட்டத்தில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட ஒரே பெண். தருமபுரியில் பணியாற்றும் தமிழ்நாடு கூட்டுறவுத் துறை ஊழியர் சங்கத்தை சேர்ந்த தோழர் கே.பழனியம்மாள் அவர்களுக்கு அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் அகில இந்திய துணைத் தலைவர் தோழர் உ.வாசுகி நினைவுப் பரிசு வழங்கினார். இந்நிகழ்வின்போது மாநாட்டு அரங்கில் பொன்னாடை அணிவித்து விண்ணதிரும் வகையில் எழுந்த பலத்த கைத்தட்டல் அடங்குவதற்கு நீண்ட நேரம் பிடித்தது என்றால் அது மிகையல்ல.*

## தீர்மானங்கள் நிறைவேற்றல்

*பிரதிநிதித்துவப் பேரவையில் ஏராளமான தீர்மானங்கள் / கோரிக்கைகள் தலைமைக் குழுவிற்கு வரப்பெற்றது. அவற்றில் பொதுக் கோரிக்கைகள் தீர்மானங்கள், துறை சார்ந்த, பிரிவுவாரி தனித்தனி தீர்மானங்கள் பெறப்பட்டது. அவற்றிற்கு உரிய வரைவுகள் தயாரித்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ள நிலையில் பேரவையின் நேர*

மேலாண்மையை கருத்தில் கொண்டு இணைப்பில் கண்டுள்ள சில தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### மாநில நிர்வாகிகள் / செயற்குழு கூட்டம்

நமது மாநில நிர்வாகிகள் கூட்டம் மற்றும் செயற்குழு கூட்டம் காலை 10.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரை மாநாட்டு அரங்கில் நடைபெற்றது.

### பிரதிநிதித்துவ பேரவை உறுப்பினர்களின் விபர தொகுப்பு அறிக்கை

பிரதிநிதித்துவ பேரவை உறுப்பினர்களின் விவர தொகுப்பு குழவின் தலைவரான மாநில துணைத் தலைவர் தோழர் என்.குமாரவேல் மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் பங்கேற்க வேண்டியவர்கள் / பங்கேற்றவர்கள் / ஆண்கள் / பெண்கள் என்பன உள்ளிட்ட விவர தொகுப்பினை பேரவையில் எடுத்துரைத்தார். இதன் விவரம் இவ்வறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை மீதான விவாதங்களுக்கு தொகுப்புரை

செயலாளர் அறிக்கை, வேலை மற்றும் ஸ்தாபன அறிக்கை மீதான விவாதங்களுக்கு பொதுச் செயலாளர் தோழர் மு.அன்பரசு அவர்களும், நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்களுக்கு மாநிலப் பொருளாளர் தோழர் எம்.தங்கராஜ் அவர்களும் தொகுப்புரை வழங்கியதை அடுத்து அறிக்கைகள் ஏற்கப்பட்டது.

### ஆர்ப்பாட்டம், பெருந்திரள் முறையீடு 11.10.2019

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியன் மற்றும் 4 செவிலியர்கள் மீதான தற்காலிக பணிநீக்கத்தையும், மருத்துவத் துறை நிர்வாக ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் தோழர் சி.கண்ணன் அவர்களின் முறையற்ற பணியிட மாறுதலை ரத்து செய்திடக் கோரியும், அரசு ஊழியர் சங்க கோயம்புத்தூர் மாவட்டத் தலைவர் தோழர் செந்தில்குமார், மாவட்டத் துணைத் தலைவர் முத்துராஜ் உள்ளிட்ட 4 பேர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையினை ரத்து செய்யக் கோரியும், திருவாரூர் மாவட்டத் தலைவரும், திருவாரூர் மாவட்ட பொது சுகாதாரத் துறையில் மருந்தாளுநராக பணிபுரிந்த தோழர் ஜி.பைரவநாதன் அவர்களின் பணியிட மாறுதல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கையை ரத்து செய்திடவும் 11.10.2019 அன்று மாவட்டத் தலைநகரங்களில் சக்திமிக்க ஆர்ப்பாட்டம் நடத்தி தமிழக முதல்வருக்கு கோரிக்கை அனுப்பும் வகையில் பெருந்திரள் முறையீடு நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

### அறைகூவல் தீர்மானம்

**தமிழகம் தழுவிய நான்கு முனைகளிலிருந்து ஊழியர் மற்றும் பொதுமக்கள் சந்திப்பு / 2019 நவம்பர் 18 கோட்டை நோக்கி பேரணி**

தஞ்சாவூரில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மாநாடு, தமிழக அரசுத் துறைகளில் காலியாக உள்ள 4.5 லட்சம் பணியிடங்களை நிரப்ப வேண்டும்

என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நவம்பர் 18 அன்று கோட்டை நோக்கி பேரணி நடத்திட முடிவு செய்துள்ளது.

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் கைவிடக்கோரியும், இளைஞர்களின் வேலைவாய்ப்பை பறிக்கும் அரசாணை 56ன் மூலம் அரசுத்துறைகளில் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை கைவிடக்கோரியும், சத்துணவு, அங்கன் வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள் உள்ளிட்ட சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் மூன்றரை லட்சம் ஊழியர்களை கால முறை ஊதியம் வழங்கிட வலியுறுத்தியும், தமிழக அரசுத்துறைகளில் காலியாக உள்ள நாலரை லட்சம் பணியிடங்களை உடனே நிரப்பிட கோரியும் - வருகின்ற நவம்பர் 11முதல் 15வரை களியக்காவிளை, இராமேஸ்வரம், வேதாரணியம் மற்றும் ஓசூர் ஆகிய நான்கு முனைகளிலிருந்து ஊழியர் மற்றும் பொதுமக்களை சந்திக்கும் பிரச்சார இயக்கம் நடத்தி நவம்பர் 18 அன்று சென்னையில் கோட்டை நோக்கி பேரணி நடத்துவதெனவும் மாநாடு முடிவு செய்தது.

மேலும் இம்மாநாட்டில், காவிரி பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்; மத்தியரசின் புதிய சுகாதார கொள்கையை கைவிட வேண்டும்; தொழிலாளர் உரிமையைப் பறிக்கும் தொழிலாளர் நலச்சட்டங்களை மத்தியஅரசு திரும்பப் பெற வேண்டும்; மீத்தேன், ஹைட்ரோ கார்பன் திட்டங்களை கைவிட வேண்டும்; நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும்; தேசிய கல்விக்கொள்கையை திரும்பப் பெற வேண்டும்; புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டம் தொடர வேண்டும்; 21மாத நிலுவையை உடன் வழங்க வேண்டும்; ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் கலந்து கொண்டவர்களின் மீதான அரசின் பழிவாங்கும் நடவடிக்கை, 17பி, பணிமாறுதல் நடவடிக்கையை உடன் ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

### மாநில நிர்வாகிகள் தேர்வு

மாநில பிரதிநிதித்துவ பேரவையின் நிறைவாக அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான மாநில நிர்வாகிகள், தணிக்கையாளர்கள் தேர்வு செய்திடும் அடிப்படையில் மாநில பொருளாளர் எம்.தங்கராஜ், புள்ளியல் துறையில் பணிபுரியும் தென்சென்னை தோழர் முனைவர் சு.கிருஷ்ணன், வருவாய்த் துறையில் பணிபுரியும் தோழர் ச.முருகதாஸ் ஆகியோர் தேர்தல் ஆணையர்களாகவும் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு தேர்தல் பணி உதவிக்காக தோழர்கள் செல்வராணி (கரூர்), வெற்றிசெல்வம் (தென்சென்னை), ப.அந்துவன்சேரல் (நாகப்பட்டினம்), முத்துக்குமார் (நீலகிரி), ராஜேந்திரன் (கடலூர்), நடராஜன் (கிருஷ்ணகிரி) ஆகிய 6 பேரைக் கொண்ட தோழர்களை நியமித்து ஜனநாயக ரீதியில் தேர்தல் நடைபெற்றது. இதில் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான நிர்வாகிகள் மற்றும் தணிக்கையாளர்கள் தேர்வு செய்யப்பட்டு நள்ளிரவு 1.45 மணிக்கு முடிவுகள் அறிவிக்கப்பட்டது.

### பேரணி, பொதுக்கூட்டம்

மாநாட்டின் நிறைவு நிகழ்வாக தஞ்சை - புதுக்கோட்டை சாலை இயேசு ஆலயம் அருகிலிருந்து பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் பங்கேற்ற மாபெரும் பேரணி நடைபெற்றது. நிறைவாக தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள

மாநகராட்சி திடலில், தோழர் ஏ.ராமசாமி நினைவுத் திடலில், ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற பொது மாநாடு நடைபெற்றது. பொது மாநாடு துவங்குவதற்கு முன்னதாக இயக்கப் பாடல்களும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மாநாட்டிற்கு மாநிலத் தலைவர் (பொறுப்பு) ஆ.செல்வம் தலைமை வகித்தார். வரவேற்புக் குழுத் தலைவர் முன்னாள் தஞ்சை மாவட்டச் செயலாளர் இரா.தமிழ்மணி வரவேற்றுப் பேசினார். பொதுச் செயலாளர் மு.அன்பரசு தீர்மானங்களை விளக்கிப் பேசினார். சிஐடியு மாநிலத் தலைவர் தோழர் அ.சவுந்தரராசன் சிறப்புரையாற்றினார். நிறைவாக வரவேற்புக்குழு செயலாளரும், மாவட்டச் செயலாளருமான தோழர் ஆ.ரெங்கசாமி நன்றி கூறினார். ❖

---

## ஜாக்டோ - ஜியோ நிகழ்வுகள்

ஜாக்டோ - ஜியோ மாநில முடிவின்படி மாணவர், ஆசிரியர் நலன் மற்றும் சமூக நீதிக்கு எதிரான தேசிய கல்விக் கொள்கை 2019-ஐ ரத்துசெய்ய வேண்டும், தொடக்கக் கல்வித் துறையை அழிக்கின்ற அரசு ஆணை எண் 145-ஐ ரத்து செய்ய வேண்டும், தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளை 20 கிலோமீட்டர்க்கு மேல் உள்ள பள்ளிகளோடு இணைக்கும் முடிவை கைவிட வேண்டும், ஜாக்டோ - ஜியோ தலைவர் மு.சுப்பிரமணியன் அவர்களை ஓய்வுபெறும் நாளில் தற்காலிக பணிநீக்கம் செய்ததைக் கைவிட வேண்டும், ஜாக்டோ - ஜியோ உயர்மட்டக்குழு உறுப்பினரும், மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியருமான மா.ரவிச்சந்திரன் அவர்களின் தற்காலிக பணிநீக்கத்தை ரத்து செய்ய வேண்டும், புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், சத்துணவு, ஊட்டச்சத்து, வருவாய்த்துறை கிராம உதவியாளர் உள்ளிட்ட அனைவருக்கும் ஊதியக் குழுவால் வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்க வேண்டும், 21 மாத ஊதியக் குழு நிலுவையை உடன் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட நிலுவைக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்பது உள்ளிட்ட 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டத் தலைநகரில் உண்ணாவிரதம் நடத்துவது தொடர்பாக நாகப்பட்டினம் மாவட்ட ஜாக்டோ - ஜியோ ஆலோசனை கூட்டம் 21.09.19 மாலை நாகப்பட்டினம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஏ.ட்டீ.அன்பழகன் மற்றும் பா.ரவி தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தலைவர்கள் எழிலரசன், செந்தில்குமார், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தலைவர்கள் ப.பார்த்தசாரதி, வடிவழகன், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத் தலைவர்கள் ரமேஷ், முருகன், செந்தில் வேலவன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் து.இளவரசன், புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க மாநிலத் தலைவர் ப.அந்துன் சேரல் ஆகியோர் பங்கேற்றனர்.




**திண்டுக்கல்லில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர்**

# துறைவாரி சங்க நிகழ்வுகள்






**த**மிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறை ஊழியர் சங்கத்தின் 14-வது மாநில பிரதிநித்துவப் பேரவை ஆகஸ்ட் 10, 11 ஆகிய தேதிகளில் தருமபுரி டி.என்.சி.விஜய் மஹாலில் மதுரை தோழர் எம்.முருகன் நினைவரங்கத்தில் நடைபெற்றது.

இரண்டாம் நாள் நடைபெற்ற நிகழ்ச்சியில் சங்க பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது. முன்னாள் பொதுச் செய லாளர்கள் ஆ.இரத்தினம், எஸ்.கோவிந்தராசு, முன்னாள் மாநில செயலாளர் மு.முத்துசாமி, முன்னாள் மாநில துணைத் தலைவர்கள் எஸ்.இராஜப்பன், சு.பகவதியப்பன் பிள்ளை, மாவட்ட முன்னோடிகள் ராமநாதபுரம் கே.ராதகிருஷ்ணன், தருமபுரி ஆர்.முனியன், நாமக்கல் டேனிரல்மங்கல்ராஜ், நாமக்கல் எம்.குணசேகரன், தஞ்சாவூர் அ.கௌதமன் ஆகியோருக்கு பாரட்டு தெரிவித்து நினைவுபரிசு வழங்கப்பட்டது.

மேலும் ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் சிறை சென்ற தோழர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

பதிவறை எழுத்தர் குடும்ப பாதுகாப்பு நிதியாக சேலம் கே.பிரிதிவ்ஆனந்த்க்கு முன்னாள் மாநில துணைத் தலைவர் பா.சங்கரன் வழங்கினார்.

மாநில துணைத் தலைவர்கள் வெ.செல்லையா, சோ.பத்மா, சு.பகவதிப்பிள்ளை கே.எஸ்.மாரியப்பன், பா.சிவக்குமார் மாநில செயலாளர்கள் சி.அய்யனார். ஆர்.பழனிவேல், க.பிச்சைவேலு, என்.வேலாயுதம், தி.க.ராமசாமி ஆகியோர் தீர்மானத்தை முன்மொழிந்தனர்.

முன்னாள் ஸ்தாபக தலைவர் என்.இளங்கோ சிறப்புறையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு நிறைவுறையாற்றினார். மாவட்டத் தலைவர் ஜி.பழனியம்மாள் நன்றி கூறினார்.

❖

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com